# இறை நெருக்கம் பெற்றவர்களின் வாழ்க்கை நெறிமுறை

ஹஸ்ரத் மிர்ஸா குலாம் அஹ்மது காதியானி (அலை)

வாக்களிக்கப்பட்ட மஸீஹ் மற்றும்
உறுதிமொழி வழங்கப்பட்ட மஹ்தி

# இறை நெருக்கம் பெற்றவர்களின் வாழ்க்கை நெறிமுறை

**ஹஸ்ரத் மிர்ஸா குலாம் அஹ்மது காதியானி (அலை)**
(வாக்களிக்கப்பட்ட மஸீஹ் மற்றும்
உறுதிமொழி வழங்கப்பட்ட மஹ்தி)

வெளியிடுவோர்:
நஸாரத் நஷ்ரோ இஷாஅத்
காதியான்

Tamil Translation of the book

# Seeratul Abdal

# இறை நெருக்கம் பெற்றவர்களின் வாழ்க்கை நெறிமுறை

# (சீரத்துல் அப்தால்)




| | |
|---|---|
| **Author** | **Hazrat Mirza Ghulam Ahmad[as]**<br>**Promised Messiah and Mahdi** |
| **Translated by** | **Maulavi O.M.Muzzammil Ahmad H.A.,** |
| **Composed by** | **Maulavi O.M.Muzzammil Ahmad H.A.,** |
| **Book set by** | **Maulavi Atha-ul-Mugnee M.A.,** |
| **First Edition** | **2024** |
| **Copies** | **500** |
| **Publisher** | **Nazarat Nashr-o-Isha'at,**<br>**Qadian - 143516**<br>**Gurdaspur, Punjab, India** |
| **Printed at** | **Fazl-e-Umar Printing Press Qadian** |

| | |
|---|---|
| நூலாசிரியர் | ஹஸ்ரத் மிர்ஸா குலாம் அஹ்மது காதியானி வாக்களிக்கப்பட்ட மஸீஹ் மற்றும் உறுதிமொழி வழங்கப்பட்ட மஹ்தி (அலை) |
| தமிழாக்கம் | மவ்லவி **O.M.** முஸ்ஸம்மில் அஹ்மது **H.A.,** |
| தட்டச்சு | மவ்லவி **O.M.** முஸ்ஸம்மில் அஹ்மது **H.A.,** |
| வடிவமைப்பு | மவ்லவி அத்தாவுல் முஃக்னீ **M.A.,** |
| முதல் பதிப்பு | **2024** |
| பிரதிகள் | **500** |
| வெளியீடு | நஸாரத் நஷ்ரோ இஷாஅத்,<br>காதியான் - **143516**<br>குர்தாஸ்பூர், பஞ்சாப், இந்தியா |
| அச்சகம் | ஃபஸ்லே உமர் பிரிண்டிங் பிரஸ் காதியான் |

***National Toll Free No: 1800 103 2131***

***Tamil Toll Free No: 1800 425 40000***



Hazrat Mirza Ghulam Ahmad of Qadian
The Promised Messiah & Mahdi
(peace be upon him)

# நூலாசிரியரைப் பற்றி...

வாக்களிக்கப்பட்ட மஸீஹும் உறுதிமொழி வழங்கப்பட்ட மஹ்தியுமான ஹஸ்ரத் மிர்ஸா குலாம் அஹ்மது (அலை) அவர்கள் 1835 -ஆம் ஆண்டு இந்தியாவிலுள்ள காதியான் எனும் சிற்றூரில் பிறந்தார்கள். தமது சிறு வயதிலிருந்தே இறை வணக்கத்திலும், பிரார்த்தனையிலும், திருக்குர்ஆன் மற்றும் பிற மத வேதங்களைக் கற்பதிலும் அன்னார் தம்மை அர்ப்பணித்துக் கொண்டார்கள். அனைத்து திசைகளிலிருந்தும் தாக்குதலுக்கு உள்ளாகும் இஸ்லாத்தின் பரிதாப நிலையைக் கண்டு, அன்னார் மிகவும் வேதனை அடைந்தார்கள். இஸ்லாத்தைப் பாதுகாப்பதற்காகவும், அதன் போதனைகளைத் தூய, பரிசுத்த வடிவில் வழங்குவதற்காகவும், அன்னார் தொண்ணூறுக்கும் மேற்பட்ட புத்தகங்களையும், ஆயிரக்கணக்கான கடிதங்களையும் எழுதியதுடன், ஏராளமான மார்க்க விவாதங்களிலும் பங்கேற்றார்கள். நல்லொழுக்க, ஆன்மிக பரிபூரணத் தன்மையை அடையும் பொருட்டு, மனிதனுக்கு இறைவனுடன் தொடர்பை ஏற்படுத்தும் ஓர் உயிருள்ள மார்க்கமாக இஸ்லாம் திகழ்கிறது என அன்னார் வாதித்தார்கள்.

ஹஸ்ரத் மிர்ஸா குலாம் அஹ்மது (அலை) அவர்களுக்கு, இளமைப் பருவத்திலிருந்தே இறைவன் புறமிருந்து கனவுகள், ஆன்மிகக் காட்சிகள், வெளிப்பாடுகள், முன்னறிவிப்புகள் வரத் தொடங்கின. 1889 -ல் இறை கட்டளையின்படி அன்னார் பைஅத் வாங்கத் தொடங்கினார்கள். ஒரு தூய ஜமாஅத்திற்கான அடித்தளமிட்டார்கள். பின்னர் இறை வெளிப்பாடுகள்

அதிகமாக வரத் துவங்கின. மேலும், பல்வேறு மார்க்கங்களில், வெவ்வேறு பெயர்களில் முன்னறிவிக்கப்பட்ட இறுதிக் காலத்தின் சீர்திருத்தவாதி தாமே என்று இறைக் கட்டளைக்கு இணங்க அன்னார் அறிவித்தார்கள். ஹஸ்ரத் ரஸூலுல்லாஹ் (ஸல்) அவர்கள் முன்னறிவித்த அந்த வாக்களிக்கப்பட்ட மஸீஹ், மஹ்தி தாமே என்றும் அன்னார் வாதித்தார்கள். அஹ்மதிய்யா முஸ்லிம் ஜமாஅத் தற்போது இருநூற்றுக்கும் மேற்பட்ட நாடுகளில் நிறுவப்பட்டுள்ளது.

**1908** -ஆம் ஆண்டில் அன்னாரது மறைவுக்குப் பின்னர், திருக்குர்ஆன், ஹஸ்ரத் ரஸூலுல்லாஹ் (ஸல்) அவர்களின் முன்னறிவிப்பிற்கிணங்க அன்னாரின் இயக்கத்தை முழுமைப்படுத்தும் பொருட்டு, கிலாஃபத் அமைப்பு (கலீஃபாவை நியமித்தல்) நிறுவப்பட்டது. ஹஸ்ரத் மிர்ஸா மஸ்ரூர் அஹ்மது (அய்யதஹுல்லாஹுத் தஆலா பினஸ்ரிஹில் அஸீஹ்) அவர்கள், ஹஸ்ரத் வாக்களிக்கப்பட்ட மஸீஹ் (அலை) அவர்களின் ஐந்தாவது கலீஃபாவாகவும், உலகளாவிய அஹ்மதிய்யா முஸ்லிம் ஜமாஅத்தின் தற்போதைய தலைவராகவும் இருந்து வருகின்றார்கள்.

## பதிப்புரை

'சீரத்துல் அப்தால்' என்ற இந்த நூலை வாக்களிக்கப்பட்ட மஸீஹும், உறுதிமொழி வழங்கப்பட்ட மஹ்தியும் ஆகிய ஹஸ்ரத் மிர்ஸா குலாம் அஹ்மது (அலை) அவர்கள் 1903-ஆம் ஆண்டில் அரபு மொழியில் இயற்றினார்கள். இந்த நூலை இதன் உருது மொழியாக்கத்திலிருந்து மதிப்பிற்குரிய மவ்லவி O.M. முஸ்ஸம்மில் அஹ்மது சாஹிப் H.A அவர்கள் 'இறைநெருக்கம் பெற்றவர்களின் வாழ்க்கை நெறிமுறை' என்ற பெயரில் தமிழாக்கம் செய்து தந்துள்ளார்கள்.

இதை, சரிபார்ப்புக் குழு உறுப்பினர்களான மவ்லவி M. ரஃபீக் அஹ்மது சாஹிப் H.A அவர்களும், முஅல்லிம் M. ஷாஜஹான் சாஹிப் அவர்களும், மவ்லவி அத்தாவுல் முஃக்னீ சாஹிப் அவர்களும் மூல நூலுடன் சரிபார்த்து திருத்தங்களை செய்துள்ளார்கள். அவ்வாறே, தமிழ் ரிவ்யூ கமிட்டி தலைவர் J.S. சலீம் அஹ்மது சாஹிப் அவர்களும், தமிழ்த்துறை இன்சார்ஜ் மவ்லவி A.P.A. தாரிக் அஹ்மது சாஹிப் அவர்களும் இந்த நூலின் தமிழாக்கத்தை முழுமைப்படுத்துவதில் ஒத்துழைப்பு வழங்கியிருக்கிறார்கள்.

இவர்கள் அனைவருக்கும் அல்லாஹ் மேலான வெகுமதியை வழங்குவானாக! ஆமீன்.

வஸ்ஸலாம்.

எளியவன்
**ஹாஃபிஸ் மக்தூம் ஷரீஃப்**
**நாஸிர் நஷ்ரோ இஷாஅத்**
**காதியான்**

## முன்னுரை

'சீரத்துல் அப்தால்' (இறைநெருக்கம் பெற்றவர்களின் வாழ்க்கை நெறிமுறை) என்ற இந்த நூல் தனது கருத்தைப் பொறுத்தவரை ஹஸ்ரத் வாக்களிக்கப்பட்ட மஸீஹ் (அலை) அவர்கள் இயற்றிய 'அலாமாத்துல் முகர்ரபீன்' (இறைவனுக்கு நெருக்கமானவர்களின் அடையாளங்கள்) என்ற அவர்களது நூலின் தொடர்ச்சியாகவே இருக்கிறது.

இந்த நூலிலும் ஹஸ்ரத் வாக்களிக்கப்பட்ட மஸீஹ் (அலை) அவர்கள் இறைவனால் நியமிக்கப்படுபவர்கள் மற்றும் இறைவனால் சீர்திருத்தவாதி ஆக்கப்படுபவர்கள் ஆகியோரின் அனைத்துப் பண்புகளையும், உயர்ந்த நல்லொழுக்கங்களையும் அருள்களையும் பற்றி மிக விரிவாக எடுத்துரைத்திருக்கிறார்கள்.

இந்த நூலில் இறைநெருக்கம் பெற்றவர்களிடம் காணப்படும் 24 உயர்ந்த, நுட்பமான பண்புகளைப் பற்றிக் குறிப்பிட்டிருக்கிறார்கள். அவை இறைவனால் நியமிக்கப்படுபவர்களின் உண்மைக்கு நிரந்தரமான தகுதிகளாக இருக்கின்றன. மேலும் இந்த அனைத்து விஷயங்களும் ஹஸ்ரத் மிர்ஸா குலாம் அஹ்மது (அலை) அவர்களிடம் முழுமையான முறையில் காணப்பட்டன.

அரபு மொழியில் எழுதப்பட்ட 'சீரத்துல் அப்தால்' (இறைநெருக்கம் பெற்றவர்களின் வாழ்க்கை

நெறிமுறை) என்ற இந்த நூல் ஹஸ்ரத் மிர்ஸா குலாம் அஹ்மது (அலை) அவர்களின் ஒரு நிகரற்ற சாதனையாகும். இது தனது சொற்செறிவிலும், கருத்துச் செறிவிலும் அழகிய சொல்லிலும், அழகிய பொருளிலும் தன்னிகரற்றதாகும்.

# பொருளடக்கம்


| எண் | பொருள் | பக்கம் |
|---|---|---|
| 1 | முதன் முதலாக 1903–ஆம் ஆண்டு வெளியிடப்பட்ட உருது நூலின் அட்டைப்படம் | XI |
| 2 | நான் ரஹ்மான் ஆகிய இறைவனிடமிருந்து நியமிக்கப்பட்டுள்ளேன் | 1 |
| 3 | சூரா அல்ஃபாத்திஹா, சூரா அல்மாயிதாவைப் படிப்பவர் எனது வாதத்தின் உண்மையைக் கண்டு கொள்வார் | 3 |
| 4 | இறைநெருக்கம் பெற்றவர்களின் முதல் அடையாளம் | 4 |
| 5 | ஆன்மிகம் இல்லாமற்போன காலத்தில்தான் இறைநெருக்கம் பெற்றவர்கள் தோன்றுகின்றனர் | 5 |
| 6 | இறைநெருக்கம் பெற்றவர்களின் இரண்டாவது அடையாளம் | 5 |
| 7 | இறைநெருக்கம் பெற்றவர்களின் மூன்றாவது அடையாளம் | 6 |
| 8 | இறைநெருக்கம் பெற்றவர்களை நெருப்பில் இட்டாலும் அவர்கள் பொய் பேசுவதில்லை | 7 |
| 9 | இறைநெருக்கம் பெற்றவர்களின் நான்காவது அடையாளம் | 7 |
| 10 | இறைநெருக்கம் பெற்றவர்களின் ஐந்தாவது அடையாளம் | 8 |
| 11 | இறைநெருக்கம் பெற்றவர்களின் ஆறாவது அடையாளம் | 8 |
| 12 | இறைநெருக்கம் பெற்றவர் காலத்தின் படைத் தளபதி ஆவார் | 9 |
| 13 | இறைநெருக்கம் பெற்றவர்களின் ஏழாவது அடையாளம் | 9 |

| எண் | பொருள் | பக்கம் |
|---|---|---|
| 14 | இறைநெருக்கம் பெற்றவர்களின் எட்டாவது அடையாளம் | 10 |
| 15 | இறைநெருக்கம் பெற்றவர்களின் ஒன்பதாவது அடையாளம் | 11 |
| 16 | இறைநெருக்கம் பெற்றவர்களின் பத்தாவது அடையாளம் | 11 |
| 17 | இறைநெருக்கம் பெற்றவர்களின் 11–ஆவது அடையாளம் | 12 |
| 18 | இறைநெருக்கம் பெற்றவர்கள் நபிமார்கள் அருந்திய பானத்தில் இருந்துதான் அருந்துகின்றனர் | 13 |
| 19 | இறைநெருக்கம் பெற்றவர்களின் 12–ஆவது அடையாளம் | 14 |
| 20 | இறைநெருக்கம் பெற்றவர்கள் உண்மையத் தேடும் சமுதாயங்களின் உள்ளங்களில் ஞானங்களை இடுகின்றனர் | 14 |
| 21 | இறைநெருக்கம் பெற்றவர்களாலேயே படைப்பினம் பாதுகாப்பாக இருக்கிறது | 17 |
| 22 | இறைநெருக்கம் பெற்றவர்களின் 13–ஆவது அடையாளம் | 17 |
| 23 | இறைநெருக்கம் பெற்றவர்களின் 14–ஆவது அடையாளம் | 18 |
| 24 | இறைநெருக்கம் பெற்றவர்கள் உலகை வாரி அணைத்துக் கொள்ள ஆசைப்பட்டதில்லை | 19 |
| 25 | இறைநெருக்கம் பெற்றவர்களின் 15–ஆவது அடையாளம் | 20 |
| 26 | இறைநெருக்கம் பெற்றவர்களின் வருகை ஒளியாகவும், செல்வது இருளாகவும் இருக்கிறது | 20 |
| 27 | இறைநெருக்கம் பெற்றவர்களின் 16–ஆவது அடையாளம் | 23 |

| எண் | பொருள் | பக்கம் |
|---|---|---|
| 28 | இறைநெருக்கம் பெற்றவர்களின் 17—ஆவது அடையாளம் | 24 |
| 29 | இறைநெருக்கம் பெற்றவர்கள் எதிரிகளின் மிரட்டலால், தாம் மேற்கொண்ட வழிகளை விட்டு விடுவதில்லை | 25 |
| 30 | இறைநெருக்கம் பெற்றவர்களின் 18—ஆவது அடையாளம் | 25 |
| 31 | இறைநெருக்கம் பெற்றவர்களின் சொற்கள் உள்ளங்களைக் கழுவி விடுகின்றன | 25 |
| 32 | இறைநெருக்கம் பெற்றவர்களின் 19—ஆவது அடையாளம் | 27 |
| 33 | இறைநெருக்கம் பெற்றவர்களின் பேச்சில் கருத்தாழம் என்பது இறைவனின் அருளால் வருகிறது | 29 |
| 34 | இறைநெருக்கம் பெற்றவர்களின் முகங்கள் சிவந்ததாக நீர் பார்க்க மாட்டீர் | 29 |
| 35 | வளமளிக்கும் காலம் வந்து விட்டதால் இறையச்சமுடைய தேடுபவர்களுக்கு நற்செய்தி | 30 |
| 36 | 7000—ஆவது ஆண்டின் துவக்கத்தில் நான் இருக்கிறேன். நபிமார்கள் அப்பாடித்தான் கூறியிருந்தனர். நீங்கள் எதுவரை என்னைப் பொய்ப்படுத்துவீர்கள் | 30 |
| 37 | இறைநெருக்கம் பெற்றவர்களின் 20—ஆவது அடையாளம் | 30 |
| 38 | இறைநெருக்கம் பெற்றவர்கள் அல்லாஹ்வை சந்திக்கும் விருப்பத்தினால் சுவர்க்கத்தை வேண்டுகின்றனர் | 30 |
| 39 | இறைநெருக்கம் பெற்றவர்களைப் பொய்ப்படுத்துபவன் தன்னையே பொய்ப்படுத்துபவனாக இருக்கிறான் | 31 |

| எண் | பொருள் | பக்கம் |
|---|---|---|
| 40 | இறைநெருக்கம் பெற்றவர்களின் உரை தொண்டையிலிருந்து எளிதாக இறங்கும் பானமாகும் | 32 |
| 41 | இறைநெருக்கம் பெற்றவர்களின் 21–ஆவது அடையாளம் | 32 |
| 42 | இறைநெருக்கம் பெற்றவர்கள் இறைநெருக்கம் எனும் பாத்திரத்தில் இருப்பதை ஒரே மூச்சாகக் குடித்து விடுக்கின்றனர் | 34 |
| 43 | இறைநெருக்கம் பெற்றவர்களின் 22–ஆவது அடையாளம் | 35 |
| 44 | இறைநெருக்கம் பெற்றவர்கள் தமது மனம் எனும் வீட்டை அல்லாஹ்வின் கைகளால் தூய்மையாக்கி விடுகின்றனர் | 35 |
| 45 | இறைநெருக்கம் பெற்றவர்களின் அந்தஸ்து வானவர்களை விட மிக நெருக்கமானதாகும் | 35 |
| 46 | இறைநெருக்கம் பெற்றவர்களுக்கு அல்லாஹ்வின் அன்பு உணவாகி விடுகிறது | 36 |
| 47 | இறைநெருக்கம் பெற்றவர்களின் 23–ஆவது அடையாளம் | 37 |
| 48 | இறைநெருக்கம் பெற்றவர்களின் கண்ணீர் நீங்கள் அருந்தும் தண்ணீரை விட அதிகமாக வழிந்தோடுகிறது | 38 |
| 49 | இறைநெருக்கம் பெற்றவர்களின் 24–ஆவது அடையாளம் | 38 |
| 50 | இறைநெருக்கம் பெற்றவர்களின் கழுத்துகள் தம் இறைவனுக்காக குனிந்து விடுகின்றன | 40 |
| 51 | இறைநெருக்கம் பெற்றவர்கள் தமது செயல்களால் வானவர்களையும் வியப்பில் ஆழ்த்தி விடுகின்றனர் | 40 |

ٹائیٹل بار اول

هذه رسالة مباركة الفتها بتوفيق الله ذي الجلال وكتبت فيها علامات عباد الرحمن

وما يعرفون به من العلم والكمال الذين يجهل مقامهم وشأنهم كل من هو في سبل الضلال وسميتها

# سيرة الابدال


طبعت في مطبع ضياء الاسلام قاديان باهتمام الحكيم فضل الدين بهيروي مالك المطبع في

شهر رمضان المبارك ١٣٢١ه وشهر دسمبر ١٩٠٣ء من وفات عيسى عليه السلام

تعداد جلد ۷۰۰

قیمت ۱ر

بِسْمِ اللّٰهِ الرَّحْمٰنِ الرَّحِيْمِ

نَحْمَدُهٗ وَنُصَلِّي عَلٰى رَسُوْلِهِ الْكَرِيْمِ

# இறை நெருக்கம் பெற்றவர்களின் வாழ்க்கை நெறிமுறை

*கேட்காமலேயே வழங்குபவனும், உண்மையான உழைப்பை வீணாக்காதவனுமாகிய அல்லாஹ்வின் பெயரால் ஆரம்பிக்கிறேன். நாம் அவனைப் புகழ்கின்றோம். அவனது கண்ணியமிக்க தூதரின் மீது நாம் ஸலவாத் ஓதுகின்றோம். (அதாவது அவர்கள் மீது அருள் பொழியுமாறு துஆ செய்கின்றோம்).*

மக்களே! அனைத்துலகங்களையும் படைத்துப் பரிபாலிக்கின்றவனிடமிருந்து எனக்கு வஹீயாக இறக்கப்பட்டதையே நான் உங்களுக்கு அறிவுரையாகக் கூறுகிறேன். நான் ரஹ்மானாகிய இறைவனிடமிருந்து நியமிக்கப்பட்டுள்ளேன். எனவே நீங்கள் உங்கள் குடும்பத்தினர் அனைவருடனும் என்னிடம் வாருங்கள். எனக்கு வானத்தின் ஞானங்கள் வழங்கப்பட்டிருக்கின்றன; வெள்ளியோ, தங்கமோ அல்ல. எனக்காக வானத்திலிருந்து பூமிக்கு வானவர்கள் இறங்கினர். காதியான் புனித பூமியாகவும், அதன் பாதுகாப்பான நகரம் போன்றும் ஆக்கப்பட்டுள்ளது.

என் இறைவன் என்னைக் கீழ்த்தரமானவர்களின் தீங்கிலிருந்து காப்பாற்றினான். என்னை உயர்ந்த அந்தஸ்தைக் கொண்டவனாக ஆக்கினான். எனக்கு அவனுடன் முழுமையான தொடர்பு ஏற்பட்டது. உடன் இருக்கும் அந்த நேசத்திற்குரியவனுக்காக எனது உடலின் ஒவ்வோர் அணுவும் அர்ப்பணமாகி விட்டது.

எனவே இதற்குப் பிறகு நான் வாளை ஏந்தும் எவருக்கும், ஆற்றல் மிக்க எந்த எதிரிக்கும் அஞ்சுவதில்லை. ஏனெனில் என் இறைவன் எனக்காக பாதுகாப்பவர்களின் நிலையில் நிற்கின்றான். நான் முழுமையான அகப்பார்வையுடன் அவனுடைய வஹீயைப் பின்பற்றுகிறேன். எனது விவகாரம் எனக்கு சந்தேகத்திற்குரியதாகவும் இல்லை; நான் இட்டுக்கட்டிக் கூறுபவனும் அல்லன். உண்மையை எதிர்ப்பவரின் விஷயத்திற்கு நான் செவிசாய்ப்பதில்லை.

நான் ஒரு கருமியைப் போன்று எவரது முகத்தையும் பார்ப்பதில்லை. எதிரிகள் என்னை அழித்துவிடுவதாக அச்சுறுத்தினாலும் சரி, நான் அவர்களில் எவரையும் பொருட்படுத்துவதில்லை. நான் அவர்களுக்கு முன்னால் கோழைகளைப் போன்று வருவதில்லை. என்னைப் பொறுத்தவரை உலகம் என்பது, முதுமையை அடைந்துவிட்டவளும், தன் கணவனுக்குக் கட்டுப்படாதவளும் ஆகிய வெறும் அவலட்சணமான பெண்ணைப் போன்றதாகும். அவளுடைய கணவர் அவளை வெறுக்கின்றார். அவள் ஆணவத்துடன் நடப்பதையும், அலங்காரம் செய்து கொள்வதையும் வெறுக்கின்றார். அவளை எல்லா விதத்திலும் இழிவாகக் கருதுகிறார். அவளை மிகத் தீய துணைவியாகக் கருதுகிறார்.

ஒருவர் சூரா அந்நூர், சூரா அல் ஃபாத்திஹா மற்றும் சூரா அல் மாயிதா ஆகிய அதிகாரங்களைத் திறந்து அவற்றை கவனமாகப் படிப்பாரென்றால், உண்மையைத் தேடுபவரைப் போன்று அதைப் பற்றி சிந்தித்தால், குறைந்த நீரிலிருந்து அதன் கீழுள்ள அதிகமான நீரின் பக்கம் செல்வாரென்றால், தனது அறிவுடைமையை உருக்குவாரென்றால், தன்னைத்

துண்டு துண்டாக்குவாரென்றால், குறைந்த நீரிலிருந்து விலகியிருந்தால், குறைந்த நீரைக் கொண்ட குளத்தைப் போதுமானதாகக் கருதாவிட்டால், பூமியின் கடுமையினால் அஞ்சாவிட்டால், ஓடும் இனிமையான நீரோடையைத் தேடுவதில் களைப்படையாதிருந்தால், அந்த நபர் எனது வாதத்தின் உண்மையைக் கண்டு கொள்வார். அவர் என் கருத்தையே நிலைநாட்டுவார். அவர் உறுதி கொள்பவர்களைச் சேர்ந்தவராகி விடுவார். மேலும் நிச்சயமாக நானே வாக்களிக்கப்பட்ட மஸீஹ் ஆவேன். நானே (தீமைகளை) அழிக்கக் கூடியவனும் நன்மைகளை வாரி வழங்குபவனும் ஆவேன். உண்மையைத் தேடுபவர்களுக்கும் இறையச்சம் கொண்டவர்களைத் தேடுபவர்களுக்கும் உரிய அந்த நபர் நானே ஆவேன். எனவே இறையச்சம் கொண்டவர்களுக்கு நற்செய்தி!

நிச்சயமாக இறையச்சம் எளிமையானதல்ல. இறைவன் மீது ஆணையாக! இறையச்சம் என்பதும் மரணத்திற்கு ஒப்பானதாகும். ஏனெனில் எவர் இறையச்சத்திற்கு முன்னுரிமை வழங்கினாரோ, அவர் மரணத்திற்கு முன்னுரிமை வழங்கியவரின் உறவினர் ஆவார். இளைஞர்களே! இறையச்சம் எத்தகைய சிகரம் என்றால், அதை வெற்றி கொள்வது கடினமானதாகும். இது எத்தகைய மரணம் என்றால், அது பலவிதமான நெருப்பினால் எரிக்கக் கூடியதாகும். அதுமட்டுமின்றி, அது சுவர்க்கங்கள் வரை கொண்டு செல்லும் ஒரு சிறந்த குதிரை ஆகும். அதற்கும், மனிதனுடைய மரணத்திற்கும் இடையில் எவ்வளவு இடைவெளி இருக்கிறது என்பது பற்றி உமக்கு என்ன தெரியும்? நீர் அதன் இறுதி எல்லையை அடைந்து விட்டால், அதை முழுமை செய்து விட்டால், அதுவே

இறைஞானம் பெற்றவர்களின் பார்வையில் மரணம் என்பதாகும். நிச்சயமாக இறையச்சம் கொண்டவர் ஷைத்தானின் கூச்சல், குழப்பத்திற்கு அஞ்சுவதில்லை.

சிறந்த, தூய்மையான, குளிர்ந்த நீரினால் நிரப்பப்பட்ட பானத்தில் கிடைக்கும் இன்பத்தைப் போன்ற இன்பம் அவருக்கு அல்லாஹ்வின் வழியில் தனது இரத்தத்தை சிந்துவதில் கிடைக்கிறது. இறையச்சம் கொண்டவர்களுக்கு அடையாளங்கள் இருக்கின்றன; அவற்றால் அவர்கள் அடையாளம் கண்டறியப்படுகிறார்கள். இளைஞர்களே! இறையச்சம் கொண்டவர்தான் இறைநேசராக இருக்கின்றார். ஷைத்தானின் குழப்பங்களின் காலத்தில் மக்களை சீர்திருத்துவதற்காக அவர்களிலிருந்தே ஒரு ஜமாஅத் அளவற்ற அருளாளனாகிய இறைவன் புறமிருந்து அனுப்பப்படுகிறது.

(1) அவர்களின் அடையாளங்களில் ஒன்று, முழு காலத்திலும் இருள் சூழ்ந்திருக்கும் நேரத்தில் அவர்கள் அனுப்பப்படுகிறார்கள். ஒழுக்கமான மக்களும், ஒழுக்கமான பண்புகளும் குறைவதால் அவர்கள் தோன்றுகிறார்கள். மேலும் (அந்தக் காலத்தில்) பன்றிகள், மிருகங்களின் குணங்களைக் கொண்ட மக்கள் அதிகமாகி விடுகின்றனர். பாலியலில் அதிக ஆசை கொண்ட நபர்கள் பெருகி விடுகின்றனர். தஹஜ்ஜூதைத் தொழுபவர்கள் குறைந்து விடுகின்றனர். மக்கள் எந்தஅளவுக்கு வீணானவர்களாகி விடுகின்றனர் என்றால், அவர்களுக்கு அறிவும் இருப்பதில்லை; செயலும் இருப்பதில்லை. காலம் சீரழிந்து விடும்போது, சிறந்தவர்களை நாசமாக்கி விடும்போது, காய்ந்த நோயாளியான (அதாவது ஆன்மிகத்தை இழந்த) குழந்தைகளையே அது பெற்றெடுக்கின்றது. வானத்தின்

கண்கள் காய்ந்து விடுகின்றன. கண்ணீர் வழிவதில்லை. பூமி தரிசு நிலமாகி விடுகின்றது. விளைச்சலைத் தருவதில்லை. மக்கள் தன்னிடம் வலிமையான ஓர் ஒட்டகம் இருந்தும், அதன்மீது ஏறி பயணிக்க முடியாதவரைப் போன்றும், தன்னிடம் சுர்மா இருந்தும், அதைத் தீட்டிக்கொள்ளாதவரைப் போன்றும் ஆகி விடுகின்றனர். மேலும் (பொதுமக்களாகிய) அவர்கள் உண்மையை விட்டும் முற்றிலும் முகம் திருப்பி விடுகின்றனர். (பாவம் என்னும்) வெள்ளப் பெருக்கால் பள்ளத்தாக்கு நிறைந்து விடுகிறது. எனவே பஞ்ச காலத்திலேயே இந்த (இறை நெருக்கம் பெற்றவர்கள் எனும்) அப்தால் என்பவர்களும் வருகின்றனர். சீர்குலைந்த நிலையை நீக்குகின்றனர். ஷைத்தானின் வயிற்றில் அம்பை எய்கின்றனர். கிழிந்து விட்டதைத் தையலிடுகின்றனர். காலத்தை ஒளிமயமாக்குகின்றனர்.

(2) (அப்தால் எனும் இறைநெருக்கம் பெற்ற) அவர்களின் அடையாளங்களில் இன்னொன்று, அவர்கள் எத்தகைய சமுதாயம் என்றால், அவர்களின் உள்ளங்கள் எவரது கம்பீரத்திற்கும் அஞ்சுவதில்லை; மேலும் எவர் குனிவதில்லையோ, எவர் அவர்களது அருளின் ஊற்றிலிருந்து கையளவு கூட அருந்துவது இல்லையோ அவரை (அவர்கள்) புழுவுக்கு சமமாகக் கூட கருதுவதில்லை. அவர்கள் தம் இறைவனின் இறைமையில் மூழ்கியவாறு இருக்கின்றனர். தம்முடைய எல்லா வழிமுறைகளிலும் அவனுக்கே முன்னுரிமை வழங்குகின்றனர். கடினத்தின் சுமையின் கீழ் அமுங்கிக் கிடக்கின்றவர்களுக்கு அவர்கள் உதவி செய்கின்றனர். மேலும் தம் கட்டாயக் கடமைகளை விட்டும் கீழே விழுகின்றவர்களை சீர்தூக்குகின்றனர். செல்வந்தர்களில் எவருக்கு முன்னாலும் அவர்களுக்கு

நடுக்கம் ஏற்படுவதில்லை. காலத்தின் குழப்பமும், மனஇச்சைகளும் பொதுவானதாகி விட்ட காலத்தில் தம்மை அனுப்பிய அல்லாஹ்வின் வழியில் அவர்கள் மன்றாடுகின்றனர். படைப்பினங்கள் மீதுள்ள அனுதாபமும், பெருமை மிக்க இறைவனின் கட்டளையும்தான் இவ்வாறு செய்வதற்கு அவர்களை இணங்க வைக்கிறது.

**(3)** (அப்தால் எனும் இறைநெருக்கம் பெற்ற) அவர்களின் அடையாளங்களில் ஒன்று, அவர்களுக்கு அவர்களின் அருள்பாலிப்பவனான இறைவனிடமுள்ள தொடர்பு பலவீனமாகி விடும்போது, அவர்கள் அடியார்களின் மீது பெருங்கருணை செய்தவாறு அந்தத் தொடர்பை பசுமை ஆக்குகின்றனர். மேலும் அவர்கள் உயரத்தை நோக்கி பறக்கின்றனர்; கொஞ்சம் உயரப் பறந்து விட்டு உட்கார்ந்து விடுவதில்லை. அவர்களுக்கு எத்தகைய பானம் அருந்தக் கொடுக்கப்படுகிறதென்றால், அதனால் அவர்கள் வீணான விஷயங்களைப் பேசுவதுமில்லை; அவர்களுக்கு தலை வலி ஏற்படுவதுமில்லை. மேலும் هَلْ مِنْ مَّزِيْدٍ அதாவது, இன்னும் ஏதாவது இருக்கிறதா என்று அவர்கள் கேட்டுக் கொண்டே இருக்கிறார்கள். போதுமானதாகக் கொள்பவர்களாக இருப்பதில்லை. அவர்களின் இரகசியங்கள் நுட்பமானவையாக இருப்பதன் காரணமாக புரிய முடிவதில்லை. அவர்கள் அந்நிய மொழி பேசிக் கொண்டிருப்பது போன்று இருக்கிறது. அவர்கள் தங்கள் இறைவன் விரும்பாத ஒவ்வொரு விஷயத்திலிருந்தும் தங்களுடைய நஃப்ஸுகளைத் தடுக்கின்றனர். உண்மையில் உறுதியாக நிலைநிற்கின்றனர். தாம் நெருப்பில் எறியப்பட்டாலும்

அவர்கள் பொய் பேசுவதில்லை. அவர்கள் துண்டு துண்டாக ஆக்கப்பட்டாலும் அவர்கள் உண்மையை மறைப்பதில்லை. தமக்கு ஏற்படும் துன்பங்களினால் அவர்கள் முகம் சுழிப்பதில்லை. அவர்கள் அல்லாஹ்வின் மீது நம்பிக்கை வைக்கின்றனர். மேலும் உலகத்தை வீணான பொருளாகக் கருதியவாறு அதன் பக்கம் கவனம் செலுத்துவதில்லை.

(4) (அப்தால் எனும் இறைநெருக்கம் பெற்ற) அவர்களின் அடையளங்களில் ஒன்று, பௌதிக வழிவகைகள் உருவாகுவதற்கு முன்னரே அவர்கள் மேலோங்குவதற்கான செய்தி (மறைமுகமாக) அவர்களுக்கு வழங்கப்படுகிறது. அவநம்பிக்கை, மக்கள் முகந்திருப்புதல், இந்த அற்பமான உலகத்தின் பொதுவான வழிவகைகள் இல்லாமற்போகும் காலத்தில் அவர்களுக்கு அல்லாஹ்வின் புறமிருந்து உதவிக்கான நற்செய்தி கிடைக்கிறது. எதுவரை என்றால், அந்த முன்னறிவிப்புகளை வெளியிடும்போது அறிவிலிகள் (இறைநெருக்கம் பெற்றவர்களாகிய) அவர்களை எள்ளி நகையாடுகின்றனர். அவர்களைப் பைத்தியக்-காரர்களாகவும், சுய விருப்பங்களைப் பெறுவதற்காக இட்டுக் காட்டிக் கூறுபவர்களாகவும் கருதுகின்றனர்.

மேலும் (உலகவாதிகளாகிய) அவர்கள் (இறைநெருக்கம் பெற்றவர்களாகிய) அவர்களை இல்லாது ஒழிப்பதற்காகவும், தூசியைப் போன்று துடைத்தெறிவதற்கும் முழு முயற்சி செய்கின்றனர். அந்த நேரத்தில் அல்லாஹ்வின் கட்டளை வானத்திலிருந்து இறங்குகின்றது. மேலும் (இறை நெருக்கம் பெற்ற) அவர்கள் கண்ணியத்திற்குரிய இறைவனின் அருட்கொடையின் அரவணைப்பில் அமர வைக்கப்படுகின்றனர். எதிரிகள் ஆணவம்

மற்றும் அகங்காரத்தின் வழியினால் (சதித்திட்டங்கள் என்ற) எந்த வலையைப் பின்னி வைத்துள்ளார்களோ அவை துண்டு துண்டாகக் கிழிக்கப்படுகின்றன. விவகாரத்திற்குத் தீர்ப்பு வழங்கப்பட்டு விடுகிறது. குழப்பங்களின் பாய்ந்தோடும் வெள்ளம் காய்ந்து போகச் செய்யப் படுகின்றது. கடைசியில் அவர்கள் வெற்றியுடனும், கண்ணியத்துடனும், தலைநிமிர்ந்தும் நோக்கத்தில் வெற்றி பெற்று விடுகிறார்கள்.

(5) (அப்தால் எனும் இறைநெருக்கம் பெற்ற) அவர்களின் அடையாளங்களில் ஒன்று, அவர்கள் அல்லாஹ்வின் வழிகளில் உறுதியான, ஆரோக்கியம் கொண்ட, விரைவாக ஓடும் பெண் ஒட்டகத்தைப் போன்று ஓடுவதை நீங்கள் பார்க்கின்றீர்கள். உலக விஷயங்களைப் பொறுத்தவரை அவர்கள் அவற்றில் விருப்பமின்மையை வெளிப்படுத்துகின்றனர். அவர்கள் அவற்றை வெறுப்புடனேயே மேற்கொள்கின்றனர்.

அல்லாஹ் அவர்கள் மூலமாக மக்களின் நல்லொழுக்கங்களையும், மறைவான நோயைப் போன்று இருக்கும் அந்தத் தீமைகளையும் வெளிப்படுத்தி விடுகின்றான். அவர்கள் நிலங்களிலுள்ள சிறப்புத் தன்மைகளை வெளிப்படுத்திவிடும் மழைக்கு ஒப்பானவர்கள். நல்ல நிலத்தின் விளைச்சல் தன் இறைவனின் கட்டளையினால் வெளிப்படுகிறது. மோசமான நிலத்தின் விளைச்சல் வீணானதாகவே வெளிப்படுகிறது. அல்லாஹ் நம்பிக்கை கொண்டவர்களுக்கும் தீயோர்களுக்கும் உரிய உதாரணத்தை இவ்வாறே விளக்கியுள்ளான்.

(6) (அப்தால் எனும் இறைநெருக்கம் பெற்ற) அவர்களின் அடையாளங்களில் ஒன்று, நீர் அவர்களை கண்ணியத்திற்குரியவராகவும், அறிவுள்ள படைத்

தளபதியாகவும், அணித்தலைவராக விளங்கும் வியாபாரியாகவும், தமது காலத்தின் குதிரைப் படைத் தலைவராகவும் காண்பீர். அவர்கள் தமது வாழ்வை மன்றாடலில் கழிக்கின்றனர். மேலும் தம் இறைவனுக்காக நின்றவாறும், சிரம்பணிந்தவாறும் முழு இரவையும் கழித்து விடுகின்றனர். மேலும் மன இச்சைகள் என்னும் ஓநாயிடமிருந்து தப்பிக்கின்றனர். மேலும் மரணம் வரும் வரை தம் இறைவனை வணங்குவதில் ஈடுபட்டிருக்கின்றனர். மேலும் இழிவான மக்கள் (இறைநெருக்கம் பெற்றவர்களாகிய) அவர்களை ஏசும்போதும், நாய்களைப் போன்று அவர்கள் மீது பாயும்போதும், பனிமூட்டத்தின் கீழ் வந்து விட்ட நிலத்தைப் போன்று (எதிரிகளாகிய) அவர்கள் (இறைநெருக்கம் பெற்றவர்களாகிய) அவர்களை ஆக்கிவிடும்போதும் அந்த நிலையிலும் நீர் அவர்களைப் பொறுமையாளர்களாகக் காண்பீர்.

(7) (அப்தால் எனும் இறைநெருக்கம் பெற்ற) அவர்களின் அடையாளங்களில் ஒன்று, அவர்கள் காரிருளின் காலத்தில் அனுப்பப்படுகிறார்கள். பழங்கள் மிகவும் குறைந்து விடுகின்ற, மரங்கள் காய்ந்த விறகுகளைப் போன்று ஆகி விடுகின்ற நேரத்தில், மக்களை ஆழ்ந்த தூக்கம் ஆட்கொண்டு விடுகின்ற, எந்தவொரு கிளையும் எஞ்சியிருக்காத மரத்தைப் போன்று மக்களின் ஈமான் ஆகி விடுகின்ற காலத்தில், காலம் தன் குழந்தைகளுக்குக் குறைபாடுள்ளதும், பயனற்றதுமான உணவைக் கொடுக்கின்றது. மக்கள் பசியுள்ள தம் குழந்தைகளைக் கண்காணிப்பதில்லை. வழிகேடு மக்களைக் குழப்பத்தில் ஆழ்த்தி விடுகிறது. மனஇச்சைகள் என்னும் எருமை மாடுகள் நற்செயல்களை மென்று தின்றுவிட்ட அத்தகைய

காலகட்டத்தில் அவர்கள் தோன்றுகின்றனர். அவர்கள் இழிந்தவர்களைப் போன்று ஒழுக்கங்கெட்டவர்களாக இருப்பதில்லை. மாறாக, அவர்கள் கோபத்தை விழுங்கி விடுகின்றனர். அறிவீனர்களில் எவர் அவர்களுக்குத் துன்பத்தைக் கொடுத்திருக்கிறாரோ, அவரை அவர்கள் மன்னித்து விடுகின்றனர். மேலும் அவர்கள் எத்தகைய வீரர்களாக விளங்குகிறார்கள் என்றால், போர்க்களத்தில் அவர்கள் நிராயுதபாணியாக இருந்தாலும், வரம்பு மீறிய அநீதிக்கு முன்னால் அவர்கள் சிரம் தாழ்த்துவதில்லை. அவர்கள் தம் இறைவனுக்கு அஞ்சுகின்றனர். இறையச்சத்தில் என்றென்றும் நிலைத்திருக்கின்றனர். அவர்களுக்கு ஏதாவது ஷைத்தானிய எண்ணம் தோன்றும்போது, அவர்கள் பாவமன்னிப்புத் தேடுகின்றனர். எனவே நடத்தை கெட்டவர்களைப் போன்று தாக்குகின்ற இச்சைகள் தோல்வியுறச் செய்யப்படுகின்றன. மேலும் (அவர்கள் மீது) மனநிம்மதி இறங்குகின்றது. மேலும் சபிக்கப்பட்ட ஷைத்தான் ஓடி விடுகின்றான்.

(8) (அப்தால் எனும் இறைநெருக்கம் பெற்ற) அவர்களின் அடையாளங்களில் ஒன்று, அவர்கள் பொய்யர்களையும், பச்சோந்தியைப் போன்று இருக்கும் பகிரங்கமான நயவஞ்சகர்களையும் நன்றாக இனங்கண்டு கொள்கின்றனர். மேலும் நீர் அவர்களை ஒவ்வொரு விவகாரத்திலும் கருத்து கூறும் திறமை கொண்டவர்களாகவும், சிங்கத்தைப் போன்று வீரமிக்கவர்களாகவும் காண்பீர். ஆயினும் அவர்கள் மிருகத்தனத்தை வெளிப்படுத்துவதில்லை. மேலும் நீர் அவர்களின் உள்ளங்களைத் தன்னிறைவு பெற்றவையாகக் காண்பீர். ஆயினும் அவர்கள் பணிவை மேற்கொள்கின்றனர்.

அவர்கள் அல்லாஹ்வின் வழிகளில் விரைவாக ஓடுபவர்களாக இருக்கின்றனர். அவர்களை ஓடச் செய்வதற்கான தேவை இருப்பதில்லை. அவர்களின் கண்ணீர் தொடர்ந்து வழிவதையும், அது நிற்பதில்லை என்பதையும் நீர் காண்பீர். அவர்கள் சொகுசை விரும்புவதன் பக்கம் சாய்வதுமில்லை; அவர்கள் அகம்பாவம் கொண்டு நடப்பதுமில்லை.

**(9)** (அப்தால் எனும் இறைநெருக்கம் பெற்ற) அவர்களின் அடையாளங்களில் ஒன்று, இறை நியதி அவர்களின் பக்கம், அமுங்கிய பாதங்களுடன் வருகின்றது (அதாவது மெல்ல மெல்ல அடியெடுத்து வைக்கிறது). மேலும் ஏதாவது சோதனை அவர்கள் மீது இறங்குவது நிர்ணயிக்கப்பட்டிருக்கும் போது, அந்த நியதி இறங்குவதற்கு முன்னரே அதைப் பற்றி அல்லாஹ் அவர்களுக்குத் தெரிவித்து விடுகின்றான். மேலும் அவர்களை நோக்கி மரணம் தாமதமாக வருகிறது; திடீரென்று வரும் விபத்துகள் போன்று வருவதில்லை. அதாவது, அல்லாஹ் அவர்களுக்கு மரணத்தைக் கொடுப்பதற்குத் தயங்குகிறான். மேலும் அவர்களின் நிம்மதியடைந்த ஆன்மாவைக் கைப்பற்றும் போது தயங்குகிறான்.

**(10)** (அப்தால் எனும் இறைநெருக்கம் பெற்ற) அவர்களின் அடையாளங்களில் ஒன்று, அவர்களுக்கு உதவி கிடைக்கின்றது. அவர்கள் ஆதரவற்றவர்களாக கைவிடப்படுவதில்லை. அவர்களுக்கும் அவர்களின் இறைவனுக்கும் இடையில் எந்த ஆசையும் தடைபடுவதில்லை. அவர்கள் (உதவியற்றவர்களாக) கைவிடப்படுவதில்லை. அவர்கள் துண்டு துண்டாக வெட்டப்பட்டாலும் படைப்பாளனிடமிருந்து அவர்கள் தனித்துவிடுவதில்லை. அவர்கள் ஆணவம் கொள்ளும்

அறிவற்றவர்களைப் போன்று இருப்பதில்லை. மாறாக, அவர்களுக்கு ஞானம் வழங்கப்படுகிறது. அவர்கள் ஒளிமயமாக்கப்படுகின்றனர். அல்லாஹ் அவர்களின் பொலிவை வெளிப்படுத்துகிறான். மேலும் அவர்கள் பகட்டு செய்வதில்லை. அவர்கள் நன்மைகளை மிகவும் அழகுபடுத்தி நிறைவேற்றுகின்றனர். அவர்கள் காயப்படுத்தப்பட்டாலும் நீங்கள் அவர்களைப் பச்சைப் பசுமையாகவும் செழிப்பாகவும் காண்பீர். அறிவிலிகள் அவர்களை மார்க்கத்தை விட்டு விலகியவர்களாகக் கருதினாலும், அவர்கள் அளவற்ற அருளாளனின் நேசர்கள் என இரவும் பகலும் சாட்சி பகர்கின்றனர். அவர்களுக்கு ஏதாவது கஷ்டம் வரும்போது அவர்கள் இறைவன் பக்கம் ஓடுகின்றனர். அல்லாஹ் அவர்களைப் பெயர் அறியப்படாதவர்களாக விட்டுவிடுவதில்லை. மாறாக, மக்கள் மத்தியில் அவர்களுக்குப் புகழும், மகத்துவமும் வழங்கப்படுகிறது. நீர் அவர்களைக் கழுதைப் புலிகளைப் போன்று காண மாட்டீர். மாறாக, அவர்கள் அழகிய, வீரமுள்ள இளைஞரைப் போன்று தென்படுகின்றனர். அவர்கள் பூமியில் பணிவுடன் நடக்கின்றனர். வயது முதிர்ந்தவர்களைப் போன்று தள்ளாடுவதில்லை.

**(11)** (அப்தால் எனும் இறைநெருக்கம் பெற்ற) அவர்களின் அடையாளங்களில் ஒன்று, அவர்களைப் பற்றி அறிவற்றவர்களின் ஒரு கூட்டம் பலவிதமான தீய எண்ணங்களைக் கொள்கின்றது. அந்தக் குற்றச்சாட்டுகளிலிருந்து அல்லாஹ்வின் பார்வையில் அவர்கள் தூயவர்களாக்கப்படுகின்றனர். அவர்கள் துன்பங்களால் துயரமடைவதுமில்லை; துக்கம் அடைவதுமில்லை. அவர்களுக்கும் நபிமார்களுக்கும் இடையே நெருங்கிய தொடர்பு இருக்கிறது. அவர்கள்

நபிமார்கள் அருந்திவந்த அதே ஆன்மிக பானத்திலிருந்துதான் அருந்துகின்றனர். அவர்களுக்கு ஏதாவது துன்பம் ஏற்பட்டால் அவர்கள் எழுந்து விடுகின்றனர்; மேலும் அல்லாஹ்வின் பக்கம் திரும்புகின்றனர். மேலும் தம்மிடம் இருப்பதை அவர்கள் இறைவனுக்காக திருப்பிக் கொடுத்து விடுகின்றனர்; அவர்கள் கருமித்தனம் செய்வதில்லை. மேலும் அவர்கள் உலகம் என்னும் கிணற்றிலிருந்து தப்பிக்கின்றனர். அவர்கள் அதன் ஓரத்திலும் நிற்பதில்லை; அதன் அருகிலும் செல்வதில்லை. நிச்சயமாக, அவர்கள் அல்லாஹ்வின் சிங்கமாக இருக்கின்றனர். அவர்கள் மறைவான சிங்கத்தின் குகையில் மறைத்து வைக்கப்படுகின்றனர். அவர்களைப் போன்ற எந்த சிங்கமும் இல்லை; எந்தப் பருந்தும் இல்லை. அவர்கள் பகைவர்களைத் தாக்கி, அவர்களை அழித்து விடுகின்றனர். அவர்கள் தூய மரத்தின் கிளைகளாக இருக்கின்றனர். அவர்களை முறிப்பதற்காக எவர் குனியச் செய்வாரோ அல்லாஹ் அவரை முறித்து விடுகிறான்.

எவர்கள் அவர்களை முற்றுகையிடுகின்றனரோ, அவர்களே காற்று அடைபட்டு மூச்சுவிட முடியாமற்போகும் நிலைக்கு உள்ளாகி கதறி அழுகின்றனர். வெள்ளத்தின் ஓரத்தில் முளைக்கும் செடியைப் போன்றும், பின்னர் அதை வெள்ளம் அடித்துக் கொண்டு சென்று விடுகின்ற நிலையில் இருக்கும் மூடர்கள்தான் அல்லது பாம்பை விட அதிகமாக ஒளிந்திரு(ந்து தாக்குதல் தொடு)ப்பவர்கள் தான் அவர்களுக்குத் துன்பத்தைக் கொடுக்கின்றனர்.

இவர்கள் எப்படிப்பட்டவர்கள் என்றால், இவர்களுக்காக அல்லாஹ்வே போரிடுகின்றான்.

மேலும் அவர்களின் பகைவர்கள் தலை தெறிக்க ஓடியவாறு தங்களுடைய கால்களைக் காயப்படுத்திக் கொண்டாலும் அவர்கள் வெற்றி பெறுவதில்லை. ஏனெனில் எவனிடமிருந்து குற்றவாளிகள் மறைவாக இருக்க முடியாதோ, அ(ந்த இறை)வனை அவர்கள் எதிர்த்துப் போரிடுகின்றனர்.

**(12)** (அப்தால் எனும் இறைநெருக்கம் பெற்ற) அவர்களின் அடையாளங்களில் ஒன்று, உண்மையைத் தேடும் சமுதாயங்களின் உள்ளங்களில் அவர்கள் தமது ஞானங்களை இடுகின்றனர். மேலும் அவர்கள் பறவைத் தன்னுடைய குஞ்சுகளுக்கு இரையூட்டுவது போன்று அவர்களை வளர்க்கின்றனர். மேலும் அவர்கள், அவர்கள் மீது பரிவு காட்டுகின்றனர். மேலும் எந்த விஷயங்கள் அவர்களுக்குப் பயனற்றவையாகவும், பொருத்தமற்றவையாகவும் இருக்கின்றனவோ அவற்றிலிருந்து அவர்களைக் காப்பாற்றுகின்றனர். மேலும் அவர்களின் மன்றாடலை மிகவும் மனம் விட்டுக் கேட்கின்றனர்; அவர்கள் கவனமற்றவர்களாக இருப்பதில்லை.

ஓநாய்களைக் காணும்போது தம்முடைய ஆடுகளை அழைத்துக் கொள்ளும் இடையர்களைப் போன்று அவர்கள் உலகத்தில் இருக்கின்றனர். அவர்கள் தம் மீது நம்பிக்கை வைப்பதில்லை. மாறாக, தஸ்பீஹ் மற்றும் தஹ்மீது செய்கின்றனர். (இறைவனின் தூய்மையை எடுத்துரைக்கின்றனர்; அவனைப் புகழ்கின்றனர்). அவர்கள் ஒய்வை (ஆடம்பரத்தை) விரும்பக்கூடியவர்களைப் போன்று வாழ்க்கை நடத்துவதில்லை. மாறாக, அவர்களுக்கு அடுத்தடுத்து துயரங்கள் வரும்போது அவர்கள் உருகி விடுகின்றனர். மேலும் மனயிச்சைகள் ஒவ்வொன்றாக அழிந்துவிடும்

அளவுக்கு அவர்களின் இறைவனிடமிருந்து அவர்களின் நஃப்ஸுகள் தூய்மையாக்கப்படுகின்றன. எதுவரை என்றால், ஆன்மா மட்டுமே எஞ்சி இருக்கின்றது. அவர்கள் தனிச்சிறப்பு பெற்றவர்களாகி விடுகின்றனர். அப்போது அவர்கள் மக்களின் பக்கம் அனுப்பப்படுகின்றனர். அப்போது அவர்கள் மக்களை நன்மை மற்றும் வெற்றியின் பக்கம் அழைக்கின்றனர்.

இதுதான் (இறைநெருக்கம் பெற்றவர்களாகிய) அப்தால் என்பவர்களின் அந்தஸ்தாகும். அவர்கள் எத்தகைய வழிகளைக் கையாண்டார்கள் என்றால், அவற்றின் வழியில் நடந்து சென்று அவர்களுக்கு கடைசியில் வெட்கமடைய வேண்டியது வரவில்லை; அவர்கள் வருத்தப்படவும் மாட்டார்கள். அவர்கள் எத்தகைய பள்ளத்தாக்குகளைக் கடந்து செல்கின்றனர் என்றால், அவற்றில் கண்ணியமான மக்கள் (என தம்மை நினைப்பவர்கள்) கடந்து செல்வதில்லை. தமக்குப் பின்னால் இறைஞானம் வழங்கப்படுகின்ற, இறையச்சத்தை மேற்கொள்கின்ற அத்தகைய ஒரு ஜமாஅத்தை விட்டுச் செல்லாதவரை அவர்கள் மரணமடைவதில்லை. அவர்கள் நாசமாகக்கூடிய ஒவ்வோர் அறிவற்றவரையும் தமது நீரூற்றின் பக்கம் அழைக்கின்றனர். அவர்கள் மனம் தளர்வதில்லை.

எனவே எவர் அவர்களுடைய குரலைக் கேட்கின்றாரோ அவர் அவர்களிடம் வந்து விடுகின்றார். ஆனால் எவர்கள் செவிடர்களாக இருக்கின்றனரோ, எவர்களின் நாவுகள் நோயுற்று புண்ணாகி விட்டனவோ, எவர்களின் உள்ளங்களின் மீது திரை விழுந்து விட்டதோ, அவர்கள் கவனம் செலுத்துவதில்லை. மேலும் நிராகரிப்பவர்கள் இறைதூதர்களின் எவ்வளவு வேதனை நிறைந்த

குரலால் அழைக்கப்பட்டாலும் அதை அவர்கள் கேட்பதில்லை. இதுவே அவர்களின் வழக்கமாக இருந்திருக்கிறது. (நிராகரிப்பவர்களாகிய) அவர்கள் இலேசான குரலினா(ல் அழைக்கப்பட்டா)லும், உரத்த குரலினா(ல் அழைக்கப்பட்டா)லும் விழிப்பதில்லை. எதுவரையென்றால் அவர்களை தண்டனை பற்றிக் கொள்கிறது. மேலும் அவர்கள் உணர்வதில்லை.

அவர்கள் பார்க்கத் துவங்கி விடும் வகையில் அல்லாஹ் அந்த மக்களின் (கண்களில் படிந்துள்ள) தூசியை ஒருவேளை அகற்றி விடலாம் என்று கருதி நபிமார்கள் முயற்சி செய்கின்றனர். ஆனால் அவர்கள் மணவிலக்குக் கொடுக்கப்பட்ட பெண்ணைப் போன்று அமர்ந்திருக்கின்றனர். மேலும் அவர்கள் தம் இறைவனுக்குக் கட்டுப்படுவதில்லை. அவர்கள் அறியாதவர்கள் போன்று முகந்திருப்பி விடுகின்றனர். புரிய முடியாத பேச்சைப் பேசும் மனிதரைப் போன்று அவர்கள் உணர்விழந்து விடுகின்றனர். அவர்கள் தீய ஒழுக்கம் கொண்டவர்களாகவும், தீய பேச்சு பேசுபவர்களாகவும் ஆகி விடுகின்றனர். அவர்கள் நபிமார்களை ஏசுகின்றனர். மேலும் குறைகளைத் தேடி அலைகின்றனர். அவர்கள் உண்கின்றனர். ஆனால் அவர்களின் வயிறு நிரம்புவதில்லை.

நிச்சயமாக நம்பிக்கை கொண்டவர்கள் அல்லாஹ்வின் வழியில் கடும் முயற்சி செய்கின்றனர். அவர்கள் காலடிகளை வேகமாக எடுத்து வைத்தாலும் (அது போதாது என்று) அவர்கள் அவற்றைத் தூற்றுகின்றனர்; மேலும் (அவர்கள் தம்மை), 'நாம் பின்தங்கியவாறு சென்று கொண்டிருக்கிறோம்' என்றே கருதுகின்றனர். அவர்கள் ஒப்புக்கொள்ளப்படுவதற்காக அல்லாஹ்வுக்காகத் துன்பங்களை சகித்துக்

கொள்கின்றனர். எனவே அல்லாஹ்வின் கருணையும் அவர்களை அரவணைக்கிறது. மேலும் அவர்கள் நெருக்கடியான வாழ்வில் விட்டு விடப்படுவதில்லை. மாறாக, அவர்கள் வெற்றியுடன் திரும்பி வருகின்றனர். கயவர்கள் அவர்களை கோதுமைக்கு மத்தியில் வளரும் களைகள் எனக் கருதுகின்றனர். ஆனால் அவர்களின் காரணமாகவே படைப்பினம் பாதுகாப்பாக இருக்கிறது. அவர்கள் அல்லாஹ்வின் திருப்தியைத் தேடக் கூடியவர்களாக இருக்கின்றனர். மேலும் அவர்கள் பிரசவ வலியால் துடிக்கும் பெண்ணைப் போன்று (இறைவன் முன்னிலையில்) கதறுகின்றனர். அப்போதுதான் அவர்கள் ஒப்புக் கொள்ளப்படுபவர்களுடன் இணைக்கப்படுகின்றனர்.

**(13)** (அப்தால் எனும் இறைநெருக்கம் பெற்ற) அவர்களின் அடையாளங்களில் ஒன்று, அல்லாஹ் அவர்களிடமிருந்து வேதனை மற்றும் நிம்மதியின்மையின் கடுமையை அகற்றி விடுகிறான். பதற்றத்தை உள்ளங்களிலிருந்து நீக்கி விடுகிறான். எனவே எல்லா நேரமும் அவர்களின் முகங்கள் மிளிர்கின்றன; மேலும் அவர்கள் அச்சப்படுவதில்லை. மேலும் அவர்களுக்கு எத்தகைய நல்லொழுக்கங்கள் வழங்கப்படுகின்றனவென்றால், அதற்கு நிகரானவை அவர்களையன்றி மற்றவர்களிடம் காணப்படுவதில்லை. மேலும் சந்திப்பின்போது அவர்கள் அடையாளங்கண்டு கொள்ளப்படுகின்றனர். அவர்கள், வருகை தருபவர்களில் எவராவது தேவாலயத்தின் தொண்டராக இருந்தாலும் அல்லது காட்டின் கழுதையைப் போன்று காட்டுமிராண்டியாக இருந்தாலும் அவர்களுடன் பணிவுடன் நடந்து கொள்கின்றனர். அவர்களின் நல்லொழுக்கம் இவ்வாறே இருக்கிறது.

**(14)** (அப்தால் எனும் இறைநெருக்கம் பெற்ற) அவர்களின் அடையாளங்களில் ஒன்று, அவர்களுக்கு அல்லாஹ்வையன்றி வேறு எந்த வழியும் இருப்பதில்லை. அவர்கள் பிறரைச் சார்ந்திருப்பதை விட்டும் தவிர்ந்திருக்கின்றனர். மேலும் கெட்டுப்போன நீரும், அல்லாஹ்வின் வழியில் அவர்களின் பார்வையில் தூய தண்ணீராக இருக்கிறது. அவர்கள் இறைதிருப்தியை நாடுபவர்களாக இருக்கின்றனர். அவர்களின் பார்வையில் உலகம் (மதிப்பற்ற) சாணமாக இருக்கிறது. மேலும் (உலகமாகிய) அதை வேண்டுபவர் பயனற்றவராக இருக்கின்றார். அல்லது இப்ராஹீமின் தந்தையைப் போன்று கழுதைப் புலியாக இருக்கிறார்.*

மேலும் அவர்கள் உலகத்தைக் கைவிட்டதன் காரணமாக குலை தள்ளிய பழங்களும், கனிகளும் அவர்களுக்குக் கிடைக்கின்றன. உலகம் அவர்களின் பார்வையில் துணியின் ஒரு துண்டாகும். அதன் மூலம் அல்லாஹ் அவர்களின் வாழ்வாதாரம் என்னும் பெரிய பானையை அடுப்பிலிருந்து கீழே இறக்குகின்றான். எனவே அவர்களுக்கு எந்தக் கவலையும் ஏற்படுவதில்லை. அவர்கள் இ(ந்த உலகத்)திலிருந்து தம்மைத் துண்டித்துக் கொள்ளும்போது, அவர்கள்

---

**அடிக்குறிப்பு: ஹஸ்ரத் இப்ராஹீம் (அலை) அவர்களின் தந்தைக்கு இணை வைத்தலின் காரணமாக جَيَّالٌ (ஜய்யாலுன்) அதாவது ضِبْعٌ (ழிப்வுன்) எனப்படும் கழுதைப் புலியின் வடிவம் கொடுக்கப்பட்டது.*

*(லிஸானுல் அரப் என்ற அரபி அகராதியில் ضِبْعٌ (ழிப்வுன்) என்ற சொல்லின் கீழ் காண்க).*

அதனை மறந்து விடும்போது இ(ந்த அருளான)து அவர்களின் இறைவனிடமிருந்து கிடைக்கின்றது. எனவே அவர்கள் அல்லாஹ்வின் பக்கம் விரைவாக முன்னேறுகின்றனர். மேலும் அவனை நினைவு கூர்வதால் (அவர்களின்) கண்ணீர் வடிந்து கொண்டே இருக்கிறது. எறும்பு தன் வாயில் எடுத்துக் கொண்டு செல்லும் (கவளம்) அளவுக்கு அவர்கள் உலகத்தைக் கருதுகின்றனர். (உலகத்தின் பொருள்களான) இதற்காக உள்ளத்தை ஆயத்தம் செய்வது வழிகேடாகும். இவை அறுக்கின்ற கத்திகள் ஆகும். மேலும் இ(ந்)த (உலகத்தி)னை தேடும் இவர்கள், ஆட்டுக் குட்டிகள் ஆவர். (உலகமாகிய) இதன் தண்ணீர் குறைவானதும், இதை உண்பது நாசமும் ஆகும். மேலும் (உலகமாகிய) இதன் பண்பு கணவர் தன்னை அழைக்கும்போது மாத விலக்கைச் சாக்காகக் கூறும் பெண்ணின் முகந்திருப்புதலைப் போன்றதாகும். அதன் வடிவம் காய்ந்த தோலைக் கொண்டது போன்று இருக்கிறது. அதில் அழகு எஞ்சியிருப்பதில்லை. அதன் துவக்கம் எளிதானதாகும்; முடிவு கடினமானதாகும். நீர் அதைப் போன்ற பழித்துரைப்பவரைக் காண மாட்டீர்.

இது கள்ளிச் செடியாகும். எனவே நீர் அதை திராட்சைக் கொத்தாகக் கருதாதீர். எனவேதான் அருளாளனின் அடியார்கள் அதைத் துண்டு துண்டாக்கக்கூடிய வாளை ஏந்தினர். அவர்கள் (உலகமாகிய) அதைத் தம்முடைய கைகளால் பிடித்ததுமில்லை; அதை வாரி அணைத்துக் கொள்வதற்கு ஆசைப்பட்டதுமில்லை. அவர்கள் அதற்கு மூன்று தலாக்கைக் கொடுத்து விட்டனர். அவர்கள் குறைமாதக் குழந்தையைப் பெற்ற நோயாளிக்கு ஒப்பானவர்களாக இருக்கவில்லை.

அவர்கள் சொல்லிலும் செயலிலும் முழுமையானவர்கள். அவர்கள் இரத்தத்தில் நசுங்குவதைப் பொருட்படுத்துவதில்லை. ஏனெனில் அவர்கள் மரணத்தை ஒப்புக் கொள்வதற்கு ஆயத்தமாக இருக்கின்றனர்.

**(15)** (அப்தால் எனும் இறைநெருக்கம் பெற்ற) அவர்களின் அடையாளங்களில் ஒன்று, நல்ல உன்னதமான உணவு கொடுக்கப்பட்ட குழந்தையைப் போன்று அவர்களின் வளர்ப்பு இருக்கின்றது. மேலும் அவர்களின் இயல்பு தனது நீந்தும் திறனில் மிக வேகமாக நீந்தும் அன்கத் எனப்படும் ஒரு வகை கடல் மீனைப் போன்று இருக்கிறது. அவர்களின் அருள்கள், தொடர்ந்து பொழியும் மழையைப் போன்று இருக்கின்றன. உண்மை தோண்டியெடுக்கப்பட்ட மரத்தைப் போன்று ஆகி விடும்போது, அவர்கள் வெளிப்படுகின்றனர். காலம் அவர்களை விட்டும் வெறுமையாகி விடும்போது, அ(ந்தக் காலமான)து மழையிலிருந்தே வெற்றிடமாகி விடுகின்றது. குழப்பங்கள் மற்றும் விபத்துகள் அதிகமாகி விடும்போது அதையே அவர்களின் வருகைக்கான மணம் கமழ வைக்கும் நறுமணமாகவும், அவர்களின் ஒளியின் முன்னோடியாகவும் கருதுங்கள்.

அவர்கள் அல்லாஹ்வின் வழிகளில் வேகமாக ஓடும் குதிரைகளைப் போன்று ஓடுகின்றனர். வயிற்றையே கிழித்து வைத்து விட்டது போன்று அவர்கள் மக்களின் இரகசியங்களை அறிந்து கொள்கிறார்கள். அவர்களின் வருகை ஒளியாகவும், அவர்கள் செல்வது இருளாகவும் இருக்கிறது. அவர்கள் சமுதாயத்திற்கும் மார்க்கத்திற்கும் ஒளியாகவும், பூமிக்கு அல்லாஹ்வின் சான்றாகவும் விளங்குகின்றனர்.

அவர்களின் தூதுச்செய்தி மின்னல் மின்னுவதைப் போன்றும், கடல் அலையலையாய் வருவதைப் போன்றும் பரவுகின்றது. மான் தனது (மறைவான) இருப்பிடத்திலிருந்து வெளியேறுவதைப் போன்று நல்லவர்கள் அவர்களை நோக்கி வெளியேறுகிறார்கள்.

கோணலான புத்தியுள்ளவர்களைத் தவிர உம்மத்தில் நல்ல இயல்பு கொண்டவர்கள் அவர்களை ஏற்றுக் கொள்கிறார்கள். மேலும் அவர்களை மறுப்பவர்கள் இன்று கொழுந்து விட்டு எரியும் நெருப்பைப் போன்று தீப்பிழம்பாக இருந்தாலும், அவர்கள் உயிர் போகும் தருவாயில் (தனது குஃப்ரின் விளைவைக்) கண்டிப்பாக அறிந்து கொள்வார்கள். (மறுப்பவர்களாகிய) அவர்கள் உலகிற்கு முன்னுரிமை வழங்குகின்றனர். மேலும் அவர்கள் அதைத் தம்முடைய உள்ளங்களின் வணக்கத்திற்குரிய இடமாக ஆக்கிக் கொள்கின்றனர். (மறுப்பவர்களாகிய) அவர்கள் சேவல் தனது கோழியுடன் சேர்வதற்காக இறக்கையை விரித்தவாறு ஓடிச் செல்வதைப் போன்று எல்லா நேரமும் அதன் பக்கம் குனிந்திருக்கின்றனர். அவர்கள் பின்னப்பட்ட கயிற்றைப் போன்று அறிவீனத்தில் உறுதியாக இருக்கின்றனர். அவர்கள் பச்சைப் பசுமையான கிளையைப் போன்று இருப்பதில்லை. மாறாக, பூசணம் பூத்த உணவைப் போன்று இருக்கின்றனர். அவர்களிடம் எந்த நன்மையும் இருப்பதில்லை; மேலும் அவர்கள் கருமிகளைப் போன்று இருக்கின்றனர். நிச்சயமாக எவர்கள் அல்லாஹ்வின் தூதர்களின் மீது நம்பிக்கை கொள்கிறார்களோ அவர்களின் உதாரணம், பசுமையான மணல் குன்றுகளின்மீது இருக்கும் தூய மரத்தைப் போன்றதாகும். அவர்கள்தான் தூய மார்க்கத்திற்கு

வலிமையான கைகளாக ஆக்கப்படுகிறார்கள். அவர்கள் அல்லாஹ்வின் பாதைகளில் இளைஞரைப் போன்று ஓடுகின்றனர். ஏனெனில், அவர்களுக்காக அவர்களின் (ஆன்மிகக்) கண்கள் திறக்கப்படுகின்றன. மேலும் அவர்கள் மனித ஆடைகளிலிருந்து வெளியே கொண்டு வரப்படுகின்றனர். மேலும் இறை ஒளியால் அவர்களின் ஈமான் என்ற மொட்டு (மலர்ந்து) கனியாகி விடுகின்றது. அவர்கள் பிடரி மயிர் கொண்ட சிங்கமாக இருந்தாலும் அவர்கள் தீய ஒழுக்கம் கொண்டவர்களாக இருப்பதில்லை.

மேலும் உலகத்தை விட்டதன் காரணமாக அவர்கள் சுமையாக உணர்வதில்லை. அதனாலேயே அவர்கள் அல்லாஹ்வின் பக்கம் (ஈடுபட்டிருப்பதில்) பறந்தவர்களாக இருக்கின்றனர். மேலும் சுமையுள்ள கால்களுடன் ஓடுபவர்க(ளைப் போன்றவர்க)ளாக இருப்பதில்லை. அவர்கள் தமது அகத்தை எவ்வாறு துடைத்தெறிந்து விடுகின்றனர் என்றால், அதில் இந்த உலகத்தின் எதனையும் அணுவளவும் விட்டு வைப்பதில்லை. அவர்கள் எந்த செயலைச் செய்தாலும் மறுமைக்காகச் செய்கின்றனர். மேலும் அதற்காகவே அவர்கள் பாடுபடுகின்றனர். அவர்களுக்கு இறைஞானங்கள் எனும் துளையிடப்படாத முத்துக்கள் வழங்கப்படுகின்றன. அவர்கள் நுட்பத்திலும் நுட்பமான இறை ஞானங்களைப் பெறுகின்றனர். எதுவரை என்றால், அவர்களை மார்க்கத்தை இழந்தவர் என ஆணவம் கொண்ட மூடன் கருதுகின்றான். மேலும் நீர் அவர்களின் முகங்களை மென்மையானதும், மிருதுவானதுமான கிளையைப் போன்று காண்கின்றீர். மேலும் அவர்கள் தம் இறைவனை அடையாளம் கண்டுகொண்டதன் காரணமாக அவர்களின் முகங்களில்

கருமை இருப்பதில்லை; மேலும் அவர்கள் அவநம்பிக்கை கொள்வதில்லை. வானத்தில் அவர்களுக்கு கண்ணியம் கிடைக்கின்றது. எனவே எவர்கள் அவர்களுடன் கண்ணியக் குறைவாக நடந்து கொள்கிறார்களோ அல்லது அவர்களின் இரத்தத்தை சிந்தச் செய்கிறார்களோ அல்லாஹ் அவர்களுடன் போர் புரிகின்றான். எனவே அவர்கள் பிடிக்கப்படுகின்றனர். மேலும் அவர்கள் வேரறுக்கப்படுகின்றனர். அவர்கள் செவிடர்கள், ஊமையர்கள், குருடர்கள் ஆவர். மேலும் கடும் பகைமையின் காரணமாக அவர்களுக்கு உள்ளத்தின் நோய் ஏற்பட்டு விடுகிறது.

**(16)** (அப்தால் எனும் இறைநெருக்கம் பெற்ற) அவர்களின் அடையாளங்களில் ஒன்று, அவர்களின் நீர்த்தேக்கத்தில் உள்ள தண்ணீர் ஒருபோதும் களங்கமாவதில்லை; அவர்களுக்கு எப்போதும் ஓடிக்கொண்டிருக்கும் தண்ணீர் வழங்கப்படுகிறது. சேறு கலந்த தண்ணீர் என்றால் என்ன என்றே அவர்களுக்குத் தெரியாது. மேலும் அவர்களுக்கு அனைத்து உலகங்களையும் படைத்துப் பரிபாலிக்கின்றவனிடமிருந்து இனிப்பான தூய தண்ணீர் தொடர்ந்து வழங்கப்படுகிறது. அவர்களின் இறைவன் அவர்களுக்குப் பாதுகாப்பாளரை வழங்குகிறான். எனவே அவர்கள் காடுகளிலிருந்தும் அவற்றில் வாழும் ஓநாய்களிடமிருந்தும் பாதுகாக்கப்படுகின்றனர். மேலும் அவர்களின் ஆன்மாக்கள் என்னும் பாத்திரம் ஒளியாலும், நுண்ணறிவாலும் நிரப்பப்படுகிறது. மேலும் இழப்பிற்குரியவர்களுக்கு மறைவாக இருக்கும் பல விஷயங்கள் அவர்களுக்குத் தெளிவாகி விடுகின்றன. இது எதனால் என்றால், அவர்கள் தம்முடைய

உயிர்களை அறுக்கப்படக் கூடிய கன்றுக் குட்டியைப் போன்று அல்லாஹ்விடம் ஒப்படைத்து விடுகின்றனர். ஒன்று, அவர்கள் தமது நிய்யத்தை நிறைவேற்றி விடுகின்றனர். அல்லது (அதை நிறைவேற்றுவதற்காகக்) காத்திருக்கின்றனர். அவர்கள் தம்முடைய அனைத்து செல்வங்களையும் அல்லாஹ்வுக்காகவே செலவு செய்கின்றனர்; அவர்கள் கருமியைப் போன்று இருப்பதில்லை. நீண்ட பச்சைப் பசுமையான கிளையைப் போன்று அவர்கள் கனிகளைத் தருகின்றனர். மிஸ்கீன்கள் அவர்களிடம் தஞ்சமடைகின்றனர். நல்லவர்களைக் காப்பாற்றுகின்ற அந்த இறைவனிடமிருந்து அவர்கள் உழைக்காமலும், பிடிவாதமாகக் கேட்காமலும் வாழ்விற்குரியவை அவர்களுக்கு வழங்கப்படுகின்றன.

(17) (அப்தால் எனும் இறை நெருக்கம் பெற்ற) அவர்களின் அடையாளங்களில் ஒன்று, அல்லாஹ் அவர்களின் ஆன்மாக்களில் முழுமையான இறைஞானத்திற்கான கடுமையான தாகத்தை உருவாக்கி விடுகிறான். மேலும் அவர்களின் நெஞ்சுகள் கிழிக்கப்படுகின்றன. மேலும் அவற்றிலிருந்து மனித குழப்பங்கள் முழுமையாக வெளியேற்றப்படுகின்றன. பிறகு அவை அல்லாஹ்வின் அன்பினால் நிரப்பப் படுகின்றன. அவனுக்காக அவர்கள் தமது உயிரை பசுவைப் போன்று அறுத்து விடுகின்றனர். மேலும் அவர்கள் இறையச்சத்திற்கான காரணிகளை ஒன்றன் கீழ் ஒன்றாக அடுக்கி வைக்கின்றனர். மேலும் அதை தேவைக்கேற்றபடி ஒவ்வொரு நேரமும் செலவு செய்து கொண்டிருக்கின்றனர். மேலும் அவர்கள் ஒவ்வொரு மூடர்களிடமிருந்தும் முகந்திருப்புகின்றனர். மேலும் தீமைகளை நன்மைகளைக் கொண்டு தூர

விலக்குகின்றனர். மேலும் அவர்கள் அல்லாஹ்வுக்காக தாழ்மையை மேற்கொண்டவாறு தமது வாழ்க்கையை ஒரு கலைந்த முடியைப் போன்றும், தூசி படிந்த நபரைப் போன்றும் கழிக்கின்றனர். அவர்கள் தாம், இறைவழியில் நடப்பதை ரொட்டி, நெருப்பில் சூடேற்றி சுடப்படுவது போன்று சூடேற்றுகின்றனர். அவர்களுக்கு சகோதரர்களும் சந்ததிகளும் அதிகமாக இருந்தாலும் எந்த சகோதரரும் எந்த மகனும் இல்லாத மனிதரைப் போன்று வாழ்க்கை நடத்துகின்றனர்.

அவர்கள் ஏக இறைவனின் கட்டளைகளை நிறைவேற்றுவதில் சீக்கிரம் முளைய வைக்கும் நிலத்தைப் போன்று இருக்கின்றனர். அவர்கள் அநீதி இழைப்பவர்களின் கடுமையான பழித்துரைத்தலைப் பொருட்படுத்துவதுமில்லை; அவர்களின் மிரட்டலால், தாம் மேற்கொண்ட வழிகளை அணுவளவு கூட விட்டு விடுவதுமில்லை. மேலும் அவர்கள் ஒரு திறமையுள்ள பெண்ணைப் போன்று தம்முடைய உள்ளங்களின் வீடுகளை அல்லாஹ்வுக்காக அலங்கரிக்கின்றனர். அவர்கள் அல்லாஹ்வுக்காக மகிழ்ச்சியடைந்தவர்களாக நிற்கின்றனர். மேலும் அல்லாஹ்வின் புறமிருந்து அவர்களுக்குக் கிடைப்பவற்றை அவர்கள் முழு உறுதியுடன் பற்றிப் பிடிக்கின்றனர்.

**(18)** (அப்தால் என்னும் இறைநெருக்கம் பெற்ற) அவர்களின் அடையாளங்களில் ஒன்று, நீர் அவர்களிடம் கொஞ்ச காலம் இருந்தால், நீர் அவர்களிடம் அற்புதங்களைக் காண்பீர். மேலும் அவர்கள் பலன்களை எட்ட வைக்கும் நேரத்தில் நீர் அவர்களை மிக அதிகமாகப் பாலைத் தரும் பெண் ஒட்டகத்தைப் போன்று காண்பீர். அவர்களின் சொற்கள் உள்ளங்களைக் கழுவி விடுகின்றன. மேலும்

அவர்களின் பேச்சு உள்ளங்களில் குடிகொண்டு விடுகிறது. எனவே அவர்கள் அருளாளனின் கட்டளையினால் இறையச்சத்தின் ஆடையால் அலங்கரிக்கப்படுகிறார்கள். மேலும் மன இச்சைகளிலிருந்து பெரும் பகுதி வெட்டப்படுகிறது. பாவங்களில் என்னவெல்லாம் சேர்ந்திருக்கின்றனவோ அவை அழிந்து விடுகின்றன. மேலும் முடிவைக் காண முடியாத அப்படிப்பட்ட எத்தனையோ குருடர்கள் பார்க்க ஆரம்பித்து விடுகின்றனர். மேலும் (அப்தால் என்னும் இறைநெருக்கம் பெற்ற) அவர்களின் மூலமாக (ஆன்மிகக் குருடர்களாகிய) அவர்கள் பண்பட்டு இறையச்சமுள்ளவர்களாகவும் அல்லாஹ்வைப் பற்றிய ஞானம் பெற்றவர்களாகவும் ஆகி விடுகிறார்கள்.

எனவே தன் கணவருக்கு முன்னால் நாயைப் போன்று குரைக்கின்ற அந்தப் பெண்ணைப் போன்று எள்ளிநாகையாடுகின்றவர்களின் மீது பரிதாபம்தான். மணவிலக்கினாலேயே அவர்கள் அழிந்து நாசமாகிப் போய்விடுவார்கள் என்பதை அவர்கள் அறிய மாட்டார்கள். ஏனெனில் அல்லாஹ் மக்களின் இரட்சிப்பை (அப்தால் என்னும் இறை நெருக்கம் பெற்றவர்களாகிய) அவர்களின் நேசத்துடனும், அருளுடனும் தொடர்புபடுத்தி இருக்கிறான். எனவே எவர் இவர்களிடமிருந்து உறவை முறித்தாரோ அவர் நாசமாகி விட்டார். ஏனெனில் அவர் பாதுகாப்பாளராக இருந்த மக்களை விட்டு விட்டார். எவரது இயல்பில் முழுமையான சோம்பேறித்தனம் உள்ளதோ, அத்துடன் அவசர குணமும், ஆணவமும் உள்ளதோ, எவர் இறைவனுக்கு அஞ்சுபவர்களைச் சேர்ந்தவராகவும், சிந்திப்பவர்களைச் சேர்ந்தவராகவும் இல்லையோ அவருக்குத்தான் இந்த துர்பாக்கியமாகும். மேலும்

இவையெல்லாம் உலக அசுத்தத்தினால் உருவாகின்றன. எனவே இதன் மூலமாகத் தன்னைக் கறைபடிந்தவராக ஆக்குபவர்களுக்கு அழிவுதான். அவர்கள் அல்லாஹ்வைச் சேர்ந்தவர்களை விரட்டியவாறும், எள்ளி நகையாடியவாறும் துன்பம் இழைக்க முயற்சி செய்கின்றனர். மேலும் அவர்கள், தம்மை நல்ல செயல்களைச் செய்பவர்களாகக் கருதுகின்றனர்.

இப்போது காலத்தின் மக்களில் அனைவரையும் விட மிகவும் அநீதி இழைப்பவர், எனக்குத் துன்பமிழைப்பதற்கு ஆயத்தமாக இருப்பவராவார். அவர் தீயவராவார். மேலும் அவர் ஷைத்தானைப் போன்று கோணலான கண்ணைக் கொண்டு பார்க்கும் ஆணவம் கொண்டவராவார். மேலும் அவர் (மலைப்)பாம்பைப் போன்று தனது சீற்றத்தினாலும் தோலின் சத்தத்தாலும் என்னை அச்சமூட்டுகிறார்.

மேலும் அல்லாஹ்வின் மீது ஆணையாக! நான், அருள் பாலிப்பவனாகிய இறைவனின் பாதுகாப்பில் இருக்கிறேன். எனவே எவர் என்னைத் துண்டிப்பதற்கு எண்ணம் கொள்வாரோ அவர் நற்கூலியையும், தண்டனையையும் வழங்கும் எஜமானனாகிய இறைவனின் கைகளினால் வெட்டப்படுவார். நான் அவனுடைய பார்வையில் இருக்கிறேன். மேலும் (இறைவனாகிய) அவனுக்கு அருகில் இருப்பதற்கு இறைதூதர் அஞ்சுவதில்லை. மேலும் ஏமாற்றுகின்றவர்களின் ஏமாற்றுதல் அவர்களுக்குக்கே திருப்பிக் கொடுக்கப்படும். அந்தோ! அவர்கள் அறிந்தால் எவ்வளவு நன்றாக இருக்கும்!!

**(19)** (அப்தால் என்னும் இறைநெருக்கம் பெற்ற) அவர்களின் அடையாளங்களில் ஒன்று, அவர்கள் போர்க்களத்தில் தைரியம் குறைந்தவர்களைப் போன்று

இருப்பதில்லை. மாறாக, அவர்கள் உறுதியாக நிலைநிற்கின்றனர். அவர்கள் கோழைத்தனத்தைக் காட்டுவதில்லை. ஓநாய்களுக்கு பயப்படுபவர்களைப் பாதுகாப்பதற்காக அவர்கள் மக்களுக்கு ஒரு திறமையான வழிகாட்டி போன்று வழிகாட்டுகின்றனர். மேலும் அவர்கள் சமுதாயத்திற்கு மிகச் சிறந்த பொருள்களைக் கொண்டு வருகின்றவர்களைப் போன்று ஞானங்களைப் பெற்று திரும்பிச் செல்கின்றனர். அவர்கள் தமக்கான முயற்சிகளை மட்டுமே போதுமானதாகக் கொள்வதில்லை. மறுபுறம் வயதின் அடித்தளம் கீழே விழுந்து விடுகின்ற, உடைந்து விடுகின்ற நாளைப் பற்றிய அச்சமும் கூடவே இருக்கிறது. எனவே அவர்கள் அல்லாஹ்விடம் வாரிசை வேண்டுகின்றனர். மேலும் அவர்கள் (வாரிசாகிய) அவரைத் தற்போது இளமைப் பருவத்தை அடைந்தவரைப் போன்று காண்கின்றனர்.

மேலும் அவர்கள் அண்டசராசரங்களின் இறைவனுடைய திருப்தியைப் பெறுவதற்காகத் தமது உணர்ச்சிகளைத் துண்டு துண்டாக்கி விடுகின்றனர். மேலும் அவர்கள் தம் இறைவனுக்காக கலப்பற்ற முறையில் தூயவர்களாகி விடுகின்றனர். மேலும் அவர்கள் கலப்படம் செய்வதில்லை. மேலும் அவர்கள் இறை சன்னிதியை விட்டு விடுவதில்லை. மேலும் இறையன்பு அவர்களின் உள்ளங்களுடன் இணைந்து விடுகிறது. அவர்கள் தமது நஃப்ஸின் தொடர்பைத் தம் அன்ப(னாகிய இறைவ)னுடன் ஏற்படுத்திக் கொள்கின்றனர். மேலும் அவர்கள் மக்கள் மீது கடும் கோபம் கொள்வதில்லை. மாறாக, நாவைப் பாதுகாக்கின்றனர்; ஒருவேளை கோபமூட்டக்கூடிய வார்த்தை அவர்களிடமிருந்து வெளிப்பட்டாலும்

மென்மையுடன் அதை நீக்குகின்றனர். அவர்கள் சொல் திறன் மிக்க சொற்பொழிவாளரைப் போன்று பேசுகின்றனர். மேலும் அவர்களின் பேச்சில், கருத்தாழம் என்பது இறைவனின் அருளால் வருகிறது.

அவர்கள் வறியவர்களுக்கு செல்வத்தை வாரிவழங்குகின்றனர். மேலும் அவர்கள் சோதனைக் களங்களில் தைரியம் கொண்ட முன்னேறிச் செல்கின்றவரைப் போன்று எதிர்த்துப் போராடுகின்றனர். நீர் கோபமான நேரத்தில் அவர்களின் முகங்களை சிவந்ததாகப் பார்க்க மாட்டீர். நீர் அவர்களைத் துன்பமான நேரத்தில் தலையைத் தூக்கிக் கொண்டிருக்கின்ற மீனைப் போன்று தம் இறைவனின் பக்கம் பார்த்துக் கொண்டிருப்பவர்களாகக் காண்பீர். மேலும் அவர்களின் கழுத்துகளில் இறையன்பு என்னும் கயிறு இருக்கிறது. நரம்பால் பின்னப்பட்ட பொறி இருப்பதில்லை. கீழ்த்தரமானவர்களே அவர்கள் மீது தாக்குதல் செய்கின்றனர். மேலும் மானமற்ற(கண)வனை விட அதிக தீயவர்கள்தான் அவர்களுக்குத் துன்பத்தைக் கொடுக்கின்றனர். அவர்களின் உறுதி எத்தகைய ஆழமானதாகவும் மிகைத்ததுமாக இருக்கிறதென்றால், அவர்கள் ஏதாவதொரு வேலையைச் செய்ய உறுதி கொண்டு விடும்போது மிக உறுதியான எண்ணத்துடன் காலெடுத்து வைக்கிறார்கள். மேலும் பாம்புடன் சண்டையிடும் சூழ்நிலை ஏற்படும்போது அவர்கள் அதைத் துண்டு துண்டாக்கி விடுகின்றனர். மேலும் எவர் தாகத்துடன் அவர்களிடம் மீண்டும் மீண்டும் வருகிறாரோ அவருக்குத் திருப்திகரமாகத் தண்ணீர் புகட்டப்படுகிறது. மேலும் அவர் எல்லாவிதமான சந்தேகங்களிலிருந்தும் தூய்மையாக்கப்படுகிறார்.

வளமளிக்கும் காலமோ வந்து விட்டது. எனவே இறையச்சமுள்ள தேடுபவர்களுக்கு நற்செய்தி! காலம் சீர்குலைந்து விட்டதை நீங்கள் பார்க்கவில்லையா? மேலும் அது பலவிதமான கொந்தளிப்புகளால் நிரம்பி விட்டது. மேலும் அதன் சுவர்கள் இடிந்து விடும் நிலைக்குப் போய்விட்டன. நோய்கள் பரவிக் கொண்டிருக்கின்றன. உயிரிழப்புகள் ஏற்பட்டுக் கொண்டிருக்கின்றன. (நாலாபுறமும்) மரணங்களே மரணங்கள் நிகழ்ந்து கொண்டிருக்கின்றன. காலத்தின் 6000 ஆண்டுகள் கழிந்து விட்டன. மேலும் நான் இப்போது 7000-ஆவது ஆண்டின் துவக்கத்தில் இருக்கின்றேன். இளைஞர்களே! நபிமார்கள் அப்படித்தான் கூறியிருந்தார்கள். எனவே எதுவரை நீங்கள் என்னைப் பொய்ப்படுத்துவீர்கள்? மேலும் நற்கூலி, தண்டனை வழங்கும் இறைவனுக்கு அஞ்சமாட்டீர்களா?

(20) (அப்தால் என்னும் இறைநெருக்கம் பெற்ற) அவர்களின் அடையாளங்களில் ஒன்று, அவர்கள் அல்லாஹ்வை சந்திக்கும் விருப்பத்திற்காக சுவர்க்கத்தை வேண்டுகிறார்களேயன்றி பறவைகளின் இறைச்சிக்காகவும், திராட்சைகளுக்காகவும் அல்ல. மேலும் நீர் அவர்களை அண்டசராசரங்களின் இறைவனின் கட்டளைகளின் பக்கம் கைகளை நீட்டியவாறு பற்றிப் பிடிப்பதை அவர்களின் குறிக்கோளாகக் காண்பீர். அவர்கள் மனித இயல்புகளின் திரைகளை அகற்றினர். மேலும் தமது உண்மையினால் இறைவனிடம் தம்மை மாய்த்துக் கொள்வதற்கு இருக்கும் தடைகளை உடைத்து விட்டனர். அல்லாஹ் தனது தோற்றங்களின் ஒரு படையை அவர்களுக்காக அனுப்பியிருப்பதால் அது

சாத்தியமானது. அதன் காரணமாக அவர்கள் தமது இருப்பின் அடிப்படையைத் தகர்த்து விட்டனர். மேலும் அவர்களிடம் நஃப்ஸின் அசைவு எஞ்சியிருக்கவில்லை. மேலும் அவர்கள் பாம்புக(ளின் தீங்குக)ளிலிருந்து அல்லாஹ்வின் பாதுகாப்பில் நுழைந்து விட்டனர். மேலும் அவர்கள் தோட்டங்களில் நுழைந்தனர். அவர்களின் முகங்கள் மின்னல் மின்னுவது போன்று மின்னின. அவர்கள் உலகவாதிகளின் முகங்களைக் கருப்பாகக் கண்டதால் அவற்றை ஒளிமயமாக்குவதற்கு முயற்சி செய்தனர். மேலும் கோழி (தன்) முட்டைகளை அடைகாப்பது போன்று அவர்கள் அவர்களை சீர்திருத்துவதற்காக கடும் முயற்சி செய்தனர்.

அவர்கள் கூக்குரலிடும் ஒவ்வொருவருக்கும் உதவி செய்கின்றனர் - அவர்கள் செயற்கையாகக் கூக்குரலிட்டாலும் சரியே. எவர்களிடம் ஷைத்தான் முட்டையிட்டு விட்டானோ, அவற்றிலிருந்து குஞ்சுகள் வெளிவந்து விட்டனவோ அவர்களைத் தவிர.

(அப்தால் எனும் இறைநெருக்கம் பெற்றவர்களாகிய) இவர்கள் இறைவனைச் சேர்ந்தவர்கள்; இவர்களைப் பொய்ப்படுத்துபவன், தன்னையே பொய்ப்படுத்துபவனாக இருக்கிறான். மேலும் அவன் இறையச்சத்தின் அழகை வீணாக்கி அதை சீர்குலைத்து விடுகிறான்.

(அப்தால் என்னும் இறைநெருக்கம் பெற்ற) இவர்களுடன் பகைமை கொள்பவர்கள் வெட்கமில்லாத பெண்ணைப் போன்றவர்களாவர். தீய நாவுடைய, தீய நடத்தையுடைய பெண்ணின் தாக்குதல் (அப்தால் என்னும் இறைநெருக்கம் பெற்ற) அவர்களுக்கு நஷ்டத்தை ஏற்படுத்த முடியாது. இந்தப்

பகைவர்களின் கைகள் போரிடும் நேரத்தில் வெடித்து விடுகின்றன. மேலும் அவர்கள் போர்க் களத்திலிருந்து நரிகளைப் போன்று வெருண்டோடி விடுகின்றனர். மேலும் நீர் அந்தத் தலைவர்களின் உரையைத் தொண்டையிலிருந்து மிக எளிதாக இறங்கும் பானத்தைப் போன்று காண்பீர். அது உள்ளங்களில் பதிந்து விடுகின்றது. மேலும் பாவங்களை விட்டு விலக்கி விடுகின்றது.

அவர்களின் மகத்துவத்திற்கு எதிராக என்ன பொய்யான அவதூறுகள் கூறப்படுகின்றனவோ அல்லாஹ் அவற்றை அவர்களிடமிருந்து அகற்றி விடுகிறான். மேலும் அவன் அவர்களை அவர்களின் நண்பர்களுக்கும், சகோதரர்களுக்கும் பாலுக்காக கொடுக்கப்பட்ட, நம்பி ஒப்படைக்கப்பட்ட ஒட்டகத்தைப் போன்று ஆக்கி விடுகிறான். அவன் அவர்களின் மூலமாக மக்களின் ஒளியற்ற, ஆணவம் கொண்ட, தீய சந்தேகங்களை உருவாக்கி விட்டு ஒளிந்து கொள்ளும் ஷைத்தானின் ஊசலாட்டங்களைப் பின்பற்றுபவர்களின் நோய்களை நீக்குகிறான். மேலும் அறிவீனர் மட்டுமே அவர்களைப் பகைத்துக் கொள்கிறார். அவர்களை எளிய இயல்புடைய இறையச்சமுடையவர்தான் ஒப்புக் கொள்கின்றார். மேலும் (இறைநெருக்கம் பெற்ற) அவர்களின் வீடுகள் தீயவர்களுக்கு விலக்கப்பட்டதாக இருக்கிறது. (தீயவர்களாகிய) அவர்கள் தீமையின் பக்கம் தெரிந்து கொண்டே ஓடிச் செல்கின்றனர். மேலும் பாசி படிந்த நீரில் திருப்தி கொண்டு விடுகின்றனர்; ஓடும் தண்ணீரிலிருந்து விலகி இருக்கின்றனர்.

**(21)** (அப்தால் என்னும் இறைநெருக்கம் பெற்றவர்களாகிய) அவர்களின் அடையாளங்களில்

ஒன்று, அவர்கள் உலகிலிருந்து மிகவும் குறைவாக எடுத்துக் கொள்கின்றனர்; ஆனால், அவர்கள் மார்க்கத்திலிருந்தோ மிக அதிகமாகப் பெற்றுக் கொள்கின்றனர். எறும்பு தனது வாயில் எடுத்துக் கொள்ளும் (கவளம்) அளவுக்கே அவர்கள் உலக அருள்களிலிருந்து எடுத்துக் கொள்கின்றனர். ஆனால் அவர்கள் இறையச்சத்திலிருந்து மிகவும் அதிகமாக எடுத்துக் கொள்கின்றனர்.

அம்பு எய்பவர் தனது அம்பை நேராக வைப்பது போன்று, அவர்கள் தம்முடைய நஃப்ஸுகளை நேராக வைக்கின்றனர். மேலும் அவர்கள் தம்முடைய எல்லா மன ஆசைகளையும் வேருடன் பிடுங்கி எறிந்து விடுகின்றனர். இறைவனின் திருப்தி மட்டும் மரத்தின் உறுதியான கிளையைப் போன்று எஞ்சி இருக்கிறது. மேலும் அவர்கள் அதில் உறுதியாக நிலைநிற்கின்றனர். மேலும் எல்லா வழியிலும் அதற்கு முன்னுரிமை வழங்குகின்றனர். மேலும் அறிவிலிகளின் கூச்சல் குழப்பங்களைப் பொருட்படுத்துவதில்லை. மேலும் அவர்கள் எந்த மக்கள் யார் என்பதையும் அவர்கள் பொருட்படுத்துவதில்லை. மேலும் அவர்கள் அம்மக்களின் கசையை மென்மையான கிளையைப் போன்று கருதுகின்றனர்; அச்சப்படுவதில்லை. மேலும் அவர்கள் எந்த ஞானத்தைப் பெற்றாலும் அன்பின் காரணமாகப் பெறுகிறார்களேயன்றி கஷ்டப்பட்டுப் பெறுவதில்லை. மேலும் அவர்களுக்கு மறைவிலிருந்து அருந்தக் கொடுக்கப்படுகிறது. எனவே அவர்கள் மனம் நிரம்ப அருந்துகின்றனர். மேலும் அல்லாஹ் அல்லாதவை(களாகிய மற்றவற்றின் தொடர்பு)களைக் கூர்மையான ஈட்டியால் அறுத்து விடுகின்றனர். மேலும்

அவர்கள் அல்லாஹ்விற்காக குறுகிய பாதைகளை மேற்கொள்கின்றனர். அவர்களை வெளியேற முடியாத அளவிளான கடினத்தில் ஆழ்த்திவிட இப்லீஸுக்கு தைரியமில்லை. அவர்கள் தமது ஒளிகள் மூலமாக அவனைத் தொலைவில் அகற்றுகின்றனர். எனவே அவர்கள் (அருள்) நிறைந்த தோல் பையை ஏந்தியவாறு இருக்கின்றனர். ஷைத்தான் அதிலிருந்து அணுவளவும் குறைத்து விட முடியாது. அவர்கள் நெருப்பினால் சூடுபிடித்து உறுதியாகவும் சரியாகவும் ஆக்கிய அவர்களின் வில்களுக்கு (ஷைத்தானாகிய) அவன் அஞ்சுகிறான். மேலும் அவர்கள் வீண் பேச்சு பேசுவதை நீர் அவர்களிடம் காணமாட்டீர். மாறாக, நீர் (அவர்களின் பேச்சில்) பசுமையையும், இறைஞானத்தையும் காண்பீர். அவர்கள் மன ஆசைகளுடன் போராடினார்கள்; நன்றாகப் போராடினார்கள். இவர்கள்தான் அறிவுள்ளவர்கள் ஆவர்; இவர்களே நேர்வழி பெற்றவர்கள் ஆவர்.

இறைநெருக்கம் என்னும் பாத்திரத்தில் இருப்பதை அவர்கள் ஒரே மூச்சாக குடித்து விடுகின்றனர். ஏனெனில் அவர்கள் ஏக இறைவனின் முன்னால் ஒரு வறியவரைப் போன்று கீழே வீழ்ந்து கிடக்கின்றனர். ஏனெனில் (இறைநெருக்கத்தின் வழியில் நடந்து செல்வதில்) அவர்கள் பேராசை கொண்டவர்களைப் போன்று இருக்கின்றனர்; அவர்கள் திருப்தியடைந்து இருந்து விடுவதில்லை. அவர்கள் மிகச் சிறப்பானவற்றிக்கும் மிக இனிமையானவற்றிக்கும் முன்னுரிமை வழங்குகின்றனர். அல்லாஹ் அவர்களிடமிருந்து தன்னைத் தவிரவுள்ள மற்றவற்றின் மீதான விருப்பங்களை வெளியேற்றி விடுகிறான்; துண்டித்து விடுகிறான். மேலும் (அல்லாஹ் ஆகிய)

அவன் தன்னைத் தவிரவுள்ளவற்றை உதறித் தள்ளி விடுவதற்கும், தன் பக்கம் அழகான முறையில் வருவதற்கும் அவர்களுக்கு நல்வாய்ப்பை வழங்குகிறான். அவர்கள்தான் உண்மையாளர்கள் என ஒவ்வொரு தீய நடத்தையுள்ளவரும் அறிந்து கொள்வதற்காகவே அவன் அவ்வாறு செய்கிறான்.

(22) மேலும் (அப்தால் என்னும் இறைநெருக்கம் பெற்ற) அவர்களின் சிறப்பம்சங்களில் ஒன்று, பெண் மாதவிலக்கிலிருந்து தூய்மையடைவதைப் போன்று அவர்கள் மனித குழப்பங்களிலிருந்து தூய்மையாக்கப்-படுகின்றனர். அல்லாஹ் அவர்களின் பக்கம் கருணையுடன் திரும்புகிறான். எனவே அவர்கள் (அவன் பக்கம்) இழுத்துச் செல்லப்படுகின்றனர். மேலும் அவர்கள் தமது மனம் என்னும் வீட்டைத் தம்முடைய கைகளாலும் அல்லாஹ்வின் கைகளாலும் தூய்மையாக்கி விடுகின்றனர். மேலும் அவர்கள் அல்லாஹ்வைத் தமது ஆன்மாவின் கண்களால் காண்கின்றனர்.

மேலும் அவர்கள் எல்லா சந்தேகங்களிலிருந்தும் தூய்மையாக்கப்படுகிறார்கள். மேலும் ஞானத்தில் முழுமையாக்கப்படுகிறார்கள். மேலும் அல்லாஹ்வின் பார்வையில் (இறைநெருக்கம் பெற்ற) அவர்களின் அந்தஸ்து வானவர்களை விட மிக நெருக்கமானதாகும். ஏனெனில் அவர்கள் தமது மனங்களை எதிர்த்துப் போரிட்டனர். சுமையை சுமந்து கொண்டு பளு தூக்குபவரைப் போன்று உறுதியாக நின்று விட்டனர். மேலும் அவர்களின் அன்பு என்னும் நெருப்பு கொளுந்து விட்டு எரிந்தது. அவர்களின் மனங்களின் விஷக் கொடுக்கு இல்லாமற் போய்விட்டது. அவர்களின் வாள்களின் முனை

கூர்மையாகி விட்டது. எனவே அவர்கள் எல்லாத் திரைகளையும் கிழித்து விட்டனர். ஏக இறைவனின் முன்னால் அர்ப்பணமாகி விட்டனர். எனவே அவர்கள் இறைவனை வணங்கிக் கொண்டிராத எந்த நேரமும் கழிவதில்லை. அல்லாஹ் அவர்களின் உள்ளங்களைத் தன்னையன்றி உள்ளவர்களை விட்டு தடுத்து விடுகிறான். அவன் அவர்களைத் தனது அன்பில் திளைக்க வைத்து விடுகிறான். எனவே அவர்களின் ஒவ்வோர் அணுவும் தம் இறைவனுக்காக குனிந்து விடுகின்றது. அல்லாஹ்வின் அன்பு அவர்களுக்கு உணவாகி விடுகின்றது. அது அவர்களுக்கு ஊட்டப்படுகிறது. தம்மைத் தவிர வேறு யாரும் அந்த உணவை எடுத்து விடாதிருப்பதற்காக அவர்கள் அதை மிக விரைவாக உண்கின்றனர். ஏனெனில் அவர்கள் தன்மானம் கொண்ட மக்களாக இருக்கின்றனர்.

அவர்கள் தம் அன்ப(னான இறைவ)னுக்காக தம்முடைய கண்களிலிருந்து கண் இமைகள் உதிர்ந்து விடும் அளவுக்கு அழுகின்றனர். மேலும் அந்தக் கவலை அவர்களின் உள்ளங்களை எரித்து விடுகின்றது. மேலும் அவனுடைய நினைவால் தோல் பையைப் போன்று நிரம்பி விடுகின்றனர். மேலும் அவர்கள் எல்லா நேரமும் அவனுக்காக நிம்மதி இழந்தவர்களாக இருக்கிறார்கள்.

இறையன்பின் காரணமாக அவர்களின் உள்ளங்கள் சுடும் கல்லைப் போன்று கொதிக்கின்றன. மேலும் அதன் காரணமாக அவர்களின் தாகம் அதிகரித்து விடுகின்றது. அவர்களின் அந்தஸ்து அல்லாஹ்விடம் எத்தகையதாக இருக்கிறதென்றால், அதை படைப்பினம் அறிவதில்லை. இதன் காரணமாகவே அவர்கள் அவர்களை ஏளனமாகப்

பார்க்கிறார்கள். மேலும் அவர்கள் மீது அசுத்தமான குற்றச்சாட்டுகளை வைக்கின்றனர்.

**(23)** (அப்தால் என்னும் இறைநெருக்கத்தைப் பெற்ற) அவர்களின் அடையாளங்களில் ஒன்று, அவர்கள் குழப்பங்கள் அலைமோதும்போது அஞ்சுவதில்லை. மாறாக, சோதனைகள் என்னும் கடல்களைக் கப்பல்களைப் போன்று கிழித்துக் கொண்டவாறு அவர்கள் வெளியேறி விடுகின்றனர். அவர்கள் உண்மையைப் பொய்யுடன் கலப்பதில்லை. மேலும் சந்தேகத்திற்குரியதை அவர்கள் வெறுக்கின்றனர். அவர்கள் களங்கமில்லாத இறையச்சத்தை விரும்புகின்றனர். (அதற்காகவே) அவர்கள் களங்கமற்றவர்களாகி விடுகின்றனர். வேறொரு பண்பு இணைவதை அவர்கள் விரும்புவதில்லை. அவர்களின் பூமி தொடர்ந்து கன மழை பொழிந்து கொண்டிருக்கும் இடத்தைப் போன்று இருக்கிறது. மேலும் அவர்கள் அதன் மூலமாக பசுமையாகவும் செழிப்பாகவும் ஆகிவிடுகின்றனர்.

மேலும் அவர்களிடம் ஓநாயைக் கொன்று விடுகின்ற அத்தகைய ஈட்டி இருக்கின்றது. மேலும் அவர்களின் உயர்ந்த இயல்பு உயர்ந்த மலைக்குன்றுகளைப் போன்று இருக்கின்றது. மேலும் அவர்களின் (இயல்பு எனும்) கொப்பரைப் பானை (இறைவனின்) அன்பினால் பொங்கி, அவர்கள் பக்குவப்பட்டு விடுகின்றனர். எவர் அவர்களிடம் வந்து அமர்கின்றாரோ - அவர் உலக அன்பினால் நிறைந்த மரியாதைக்குரியவராக இருந்தாலும் சரியே - அப்போதும் அவர் இந்த இறையச்சம் கொண்ட சமுதாயத்தின் அருளினால் ஊசியின் துளையிலிருந்தும் வெளியேறி விடுவார். எவர் ஷைத்தானை வணங்கக்

கூடியவரைச் சேர்ந்தவராக இருப்பாரோ அவர் இவர்களின் அருகில் வந்தால், அவர் தீயதைச் செய்யாதவர்களைச் சேர்ந்தவராகி விடுவார். எவர் அகம்பாவம் கொண்ட ஷைத்தானாக இருப்பாரோ அவர் நம்பிக்கை கொண்டவராக மாறி, இவர்களுடன் நன்றியுணர்வோடு நடந்து கொண்டால், அவர் தனது மூக்கை அல்லாஹ்வின் கட்டளைக்கு முன்னால் மண்ணாக்கிக் கொள்வார். (அதாவது பணிவை மேற்கொள்வார்). மேலும் இறையச்சமுடையவர்களைச் சேர்ந்தவராகி விடுவார். கேட்பவரே! நீர் வியப்படையாதீர். அவர்களின் மகத்துவம் இதைவிட மிக உயர்ந்ததாகும். நீங்கள் புரிந்து கொள்ள முடியாதிருக்கும் நிலையில், அது பற்றி நான் உங்களுக்கு எவ்வாறு எடுத்துச் சொல்வேன்? அது எத்தகைய மன்றாடும் சமுதாயம் என்றால், அவர்களின் கண்ணீர், நீங்கள் அருந்தும் தண்ணீரை விட அதிகமாக வழிந்தோடுகின்றது.

(24) (அப்தால் என்னும் இறைநெருக்கம் பெற்ற) அவர்களின் அடையாளங்களில் ஒன்று, பிரித்தெடுக்கப்படவிருக்கும் செயல்கள் எனும் (நெற்)குவியலிலிருந்து அவர்கள் உண்மையான நற்செயல்களைப் பிரித்தெடுக்கின்றனர். அதன் எஞ்சிய உமியை வழிதவறியவர்களுக்காக விட்டு விடுகின்றனர். அவர்கள் கலப்பற்ற பொருள்களை எடுத்துக் கொள்கின்றனர். மேலும் பேராசையின் பின்னால் செல்வதில்லை. அவர்கள் உண்மையைத் தேடுவதில் தொடர்ந்து ஈடுபட்டுக் கொண்டிருக்கின்றனர். அவர்கள் ஒவ்வொரு பொருளையும் அதன் கீழே உள்ளது வெளிப்படும்வரை அசைத்துக் கொண்டிருக்கின்றனர்; அவர்கள் தேடுவது அவர்களுடைய கண்களுக்கு

முன்னால் வழிந்தோடத் துவங்கும் வரை அவர்கள் தேடுகின்றனர். அறிவிலிகள் மறுப்பதை அவர்கள் மறுப்பதில்லை; மாறாக, அவர்கள் முழுமையாக ஆய்வு செய்கின்றனர். மேலும் அவர்கள் குறுகிய மனப்பான்மை கொண்ட கயவர்களைப் போன்று வாழ்க்கை நடத்துவதில்லை. மாறாக, மறுமைக்கான கடைவீதியின் மிகச் சிறந்த பொருள்களை ஒன்று சேர்க்கின்றனர்; கவனக் குறைவு காட்டுவதில்லை.

நீர் அவர்களின் உள்ளங்களின் நிம்மதியற்ற ஓசையை உலையில் உள்ள பானையின் கொதிப்பைப் போன்று கேட்பீர். மேலும் அவர்கள் (உள்ளங்களின் நிம்மதியற்ற ஓசை எனும்) அந்தத் தடியாலேயே இப்லீஸை அடிக்கின்றனர். மேலும் அவர்கள் எத்தகைய அன்பிற்குரியவனுக்கு (எல்லாவற்றையும் விட) முன்னுரிமை கொடுக்கின்றனரோ, அவனுக்காக அவர்கள் எல்லாக் குழப்பத்திலிருந்தும் தவிர்ந்திருக்கின்றனர். ஆதமை வழிகெடுத்த பாம்பின் விஷப்பற்களைப் பிடிங்கி விட்டனர். அவர்கள் (பாம்பாகிய) அதை காயப்படுத்தும் சாட்டையால் அடித்தார்கள். எனவே அது அவர்களைத் தாக்க முடியாமற்போய் விட்டது. இன்னும் சொல்வதாயின், அது கல்லால் அடித்துக் கொல்லும் சமுதாயத்தை விட்டு வெருண்டோடி விட்டது. மேலும் அவர்கள் அதனை சிங்கத்தைப் போன்று தாக்கினர். மேலும் அவர்கள் (இப்லீஸ் எனும்) அவனுடைய வேரைப் பிடுங்கி எறிந்து விடுவோம் என்பதையும், அவனுடைய தீங்கிலிருந்து மக்களுக்கு இரட்சிப்பை வழங்குவோம் என்பதையும், அவனிடமிருந்து விடுதலை பெற்றுத் தருவோம் என்பதையும் தமது ஆன்மாக்களின் மீது கடமையாக்கிக் கொண்டனர்.

மேலும் செம்மறி ஆட்டுக் குட்டிகளின் உடலிலுள்ள தோல் தெரியும் அளவுக்கு அவற்றின் ரோமங்கள் நீக்கப்படுவதைப் போன்று அவர்கள் (இப்லீஸ் ஆகிய) அவனுடைய தோலை நீக்கி விடுகின்றனர். மேலும் அவர்கள் ஈட்டிகளினால் அவனைக் காயப்படுத்தி விடுகின்றனர். மேலும் அவர்களின் கழுத்துகள் தம் இறைவனுக்காக குனிந்து விடுகின்றன. மேலும் அவர்கள் அவனுக்காகவே கீழ்ப்படிந்தவர்களாக ஆகி விடுகின்றனர். இந்த மக்கள் எத்தகையவர்கள் என்றால், அவர்களின் காரணமாக படைப்பினங்களின் கண்கள் வியற்பிற்குள்ளாகி விடுகின்றன. மேலும் அவர்கள் தம்முடைய செயல்களால் வானவர்களையும் வியப்பில் ஆழ்த்தி விட்டனர். அவர்கள் தமது சதையை ஏக இறைவனின் தட்டில் வைத்து விட்டனர். எனவே உணவு விரிப்பில் என்னவெல்லாம் இருந்தனவோ அவற்றை அல்லாஹ் உண்டு விட்டான். மேலும் அவர்கள் அன்பு என்னும் விரல் நுனிகளால் உண்ணப்பட்டு விட்டனர். மேலும் எந்த அன்பிற்குரியவனை அவர்கள் தேர்ந்தெடுத்திருந்தார்களோ அவனுக்காகவே அவர்கள் அர்ப்பணமாகி விட்டனர்.

நிறைவுற்றது.

இயற்றியவர்:
மிர்ஸா குலாம் அஹ்மது காதியானி
**14 டிசம்பர் 1903**